பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 205 ஆனி 07 ஆம் நாள் சனிக்கிழமை 22 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## நான்கு மாதங்களில் ஆட்சி மாற்றம்

### அடித்துக் கூறுகின்றார் மகிந்த

கொழும்வு, ஜூன் 22
இலங்கையில் இன்னும் நான்கு மாதங்களில் ஆட்சி மாற்றம் ஏற்படும். இது உறுதி என்று அடித்துக் கூறியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச
தேசிய சுதந்திர முன்னணியால் விகாரமகா தேவி பூங்கா வளாகத்தில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

19

## கோத்தபாயவே வேட்பாளர் பெரமுன தலைவர் மகிந்த!

கொழும்பு, ஜூன் 22
சிறி லங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைப் பதவி ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்றும், அதன்பின்னர் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பை மகிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வமாக வெளியிடுவார் என்றும் கூட்டு எதிரணி வட்டாரங்களிலிருந்து

19



## முஸ்லிம் மக்களின் எதிர்ப்பு போராட்டமும் தொடர்கிறது

கொழும்பு, ஜூன் 22
கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கல்முனை முஸ்லிம் மக்கள் மேற்கொள்ளும் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகக் கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் நடைபெற்றது.
அந்தப் போராட்டத்தில் சிறி லங்கா முஸ்லிம் காங்

19

## கல்முனையில் போராட்டம் தீவிரம்

# அரசின் உறுதிமொழியுடன் சென்ற குழு மீது கொதிப்பு!

### காலம் கடத்த முயலாது தீர்வு வழங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 22
கல்முனை வடக்குப் பிரதேச செயலத்தைத் தரமுயர்த்துவது தொடர்பாக அரசு முன்வைத்துள்ள தீர்வைக் கல்முனையில் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோர் ஏற்க மறுத்துள்ளனர். அந்தத் தீர்வு தொடர்பாக அறிவிப்பதற்காக நேற்று அங்கு சென்ற



அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவினருக்குப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அதையடுத்து அந்தக் குழுவினர் பாதுகாப்பு அதிகாரிகளால் அங்கிருந்து பலத்த சிரமத்தின் மத்தியில் அகற்றிச் செல்லப்பட்டுள்ளனர்.

19



## தொடருந்தில் மோதுண்டு மிருசுவிலில் பெண் சாவு

### நேற்றுப் பிற்பகல் கோர விபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் மிருசுவில் கடுகதித் தொடருந்தில் மோதிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நடந்துள்ளது.
மிருசுவில், ஒட்டுவெளியைச் சேர்ந்த மாணிக்கம் மகேஸ்வரி (வயது50) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.
இவர் தொடருந்துத் தடத்தைக் கடந்து சென்று அங்குள்ள ஆலயம் ஒன்றில் வழிபாடு மேற்கொண்டுவிட்டு தொடருந்துத் தடத்தைக் கடந்து வீடு

19

## கோத்தபாய மன்றுக்கு வராததால் லலித், குகன் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
காணாமல் ஆக்கப்பட்டுள்ள லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள்கொணர்வு மனு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கில் சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நேற்று மன்றில் முன்னிலையாகததால் வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்று கோத்தபாய ராஜபக்ச மன்றில் முன்னிலையாகிச் சாட்சியம் வழங்க வேண்டும் என்றும், அது தொடர்பாக அவருக்கு மீள

19

## பதில் பொலிஸ் மா அதிபரால் ரிசாத் பற்றி கருவுக்கு கடிதம்!

கொழும்பு, ஜூன் 22
முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தொடர்பாக சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு, பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அந்தக் கடிதத்தில் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தீவிரவாதச் செயற்பாடுகள் எவற்றிலும் சம்பந்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.
தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட பொலிஸ் குழு நடத்திய விசாரணைகளில் ரிசாத் பதியுதீன் மீதான இதர குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும், அவருக்குத் தீவிரவாதத்துடன் தொடர்பு இருக்கின்றது

19

## இலங்கைத் தமிழர்கள் நால்வர் தமிழகத்தில் உணவு தவிர்ப்பு

சென்னை, ஜூன் 22
தமிழ்நாடு - திருச்சியில் உள்ள சிறைச்சாலை முகாமில் இலங்கைத் தமிழர்கள் நால்வர் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
திருச்சி மத்திய சிறை வளாகத்தின் சிறப்பு முகாமில் இவர்கள் நால்வரும் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், கடந்த

19

## வெலிக்கடை கொலைவழக்கை விசாரிப்பதற்கு சிறப்புக் குழாம்

### தலைமை நீதியரசரிடம் சட்டமா அதிபர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22
வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்றன என்று கூறப்படும் படுகொலைகள் தொடர்பாக மேல் நீதிமன்றச் சிறப்பு விசாரணைகளை ஆரம்பிக்க மூவர் கொண்ட சிறப்பு குழாமை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சட்ட மா அதிபரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான தப்புல டி லிவேரா, தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரியவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
1979 ஆம் ஆண்டின் 15

19





# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். சனி பெயர்ச்சி அடைய இன்னும் 6 மாதங்கள் இருந்தாலும் அவரது சஞ்சார பலன், பார்வை பலன் ஆறு மாதத்திற்கு முன்பு இருந்தே தொடங்கி விடும் என்பதால் இந்த பலன்கள்.

இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு, மகரம் , கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.




கடகம் ராசிக்காரர்களுக்கு ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு சனி பகவான் நகர்கிறார். கண்டச்சனி காலத்தில் கடகம் ராசிக்காரர்களுக்கு வேலை, கல்வி, திருமணம், குழந்தை பாக்கியம் கடகம் ராசிக்காரர்களுக்கு எப்படி என்று பார்க்கலாம்.

சனியானவர் உங்களது ராசிக்கு 7 மற்றும் 8ஆம் வீட்டுக்கு அதிபதி அவர் 7ஆம் இடத்தில் ஆட்சி பெற்று சஞ்சாரம் செய்வது சற்று சுமார் ஆனாலும் கடகம் ராசிக்காரர்களுக்கு பாதிப்பு அதிகம் இருக்காது. சனி பகவான் ஆறாம் இடத்தில் இருந்தாலும் அலைச்சல், வேதனை, நோய்வாய்ப்படுதல் கடன் இவையெல்லாம் கொஞ்சமாக இருந்தது. இனி சஞ்சரிக்கவிருக்கும் 7ஆம் இடம் என்பது கண்டச்சனி என்றாலும் ராசிக்கு கேந்திரமாக இருப்பதால் சனியினுடைய கடுமை வரும் காலங்களில் சற்றுக் குறைந்து காணப்படும். சனிபகவான் உங்கள் ராசிக்கு களத்திர ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு உங்கள் ராசிக்கு 4ஆம் இடம், 9ஆம் இடம், மற்றும் உங்கள் ராசியைப் பார்வையிடுகிறார்.

### ஒற்றுமை அதிகரிக்கும்

வெளியூர் மற்றும் வெளிநாடு செல்வதில் இருந்த தடைகள் விலகி வெளிநாட்டுக்குச் செல்லக் கூடிய யோகம் கூடிவரும். புதிய விடயங்களைக் கற்பதில் ஆர்வமும் உற்சாகமும் மிகுந்து காணப்படும். எப்பொழுதும் சுறுசுறுப்பும் சிந்தனை சக்தியும் மிகுந்து காணப்படும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சண்டை, சச்சரவுகள் நீங்கி குடும்பம் ஒற்றுமையுடன் மகிழ்ச்சியாக வாழ வழி ஏற்படும்.

### நன்மைகள் அதிகம்

சனிபகவான் தனது ஏழாவது பார்வையால் உங்கள் ராசியைப் பார்ப்பதால் தெய்வ அனுகூலம் அதிகரிக்கும். செயல்களில் சில தடைகள் ஏற்பட்டாலும் தெய்வ அனுகூலம் காரணமாக அனைத்து செயல்களையும் வெற்றிகரமாக முடிப்பீர்கள். எப்பொழுது எல்லாம் உங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அதைத் தீர்க்க இறைவன் ஒருவரை உங்களுக்கு அனுப்பி வைப்பார்.

உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவும். குருதி அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்கள் கவனமாக இருக்கவும். தண்ணீர் அதிகம் குடிக்கவும். இந்த இடப்பெயர்ச்சியால் உங்கள் பெற்றோர்களுக்கும் பாதிப்பு வரலாம். அப்பாவின் உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவை. தாயரால் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும். தாயாரின் அன்பும் ஆசியும் கிட்டும்.

### வருமானம் கூடும்

சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். நீங்கள் யார் என்று உலகுக்கும் மற்றவர்களுக்கும் தெரியவரும். பேச்சில் சாமர்த்தியம் கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும், கடன் கொடுத்த பணம் திரும்ப கைக்கு வந்து சேரும். பழைய இடங்களை விற்று புதிய இடம் வீடு, வண்டி, வாகனங்கள், விட்டு உபயோக பொருள்கள் வாங்க ஒரு சிலருக்கு வாய்ப்பு அமையும். உயர்கல்வி பயில வாய்ப்பும் சந்தர்ப்பமும் அமையும்.

### தன்னம்பிக்கை அதிகரிக்கும்

இதுவரை குடும்பத்தில் நடைபெறாமல் தள்ளிப் போன சுப காரியங்கள் இனிதே நடந்தேறும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்யம் அமையும். காதல் விடயங்களில் மன ஈடுபாடு அதிகரிக்கும் ஒரு சிலருக்கு காதல் கனிந்து திருமணத்தில் முடியும் அடிக்கடி விருந்து கேளிக்கைகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் வந்து சேரும். குடும்பத்தில் புதிய வரவுகள் வந்து சேரும். அதனால் மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிலவும். சகோதர, சகோதரிகளின் அன்பும், ஆதரவும் இருந்து வரும். தன்னம்பிக்கையும் ஊக்கமும் அதிகரிக்கும்.

### இடமாற்றம் ஏற்படும்

தேவையில்லாத விடயங்களில் தலையிடக் கூடாது. வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு அமையும். ஆனால் வேலையில் திருப்தியற்ற நிலைமையே அமையும். எனவே கிடக்கும் வேலையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவசரப்பட்டு பார்க்கும் வேலையை விட்டுவிடக் கூடாது. வேலையாட்களால் நன்மை. உண்டாகும். ஒரு சிலருக்கு வேலையில் இடமாற்றம், ஊர் மாற்றம் அமையும். வேலையில் உத்தியோக உயர்வு ஊதிய உயர்வு கிட்டும். சக தொழிலாளர்களால் தேவையற்ற மன வருத்தங்கள் உண்டாகும். உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு சுமாராக இருந்து வரும்.

### பணம் விடயத்தில் கவனம்

யாருக்கும் தேவையில்லாமல் பணம், கடன் கொடுப்பதோ, கையெழுத்து போடுவதோ கூடாது. தேவையில்லாமல் கடன் வாங்குதல் கூடாது. கடன்களை கட்டுக்குள் வைத்து கொள்ளுங்கள். மனம் அமைதியற்ற நிலை ஏற்படும் காலத்தில் யோகா, தியானம் செய்ய மனது அமைதிப்படும். சரியான நேரத்திற்கு சாப்பிடுங்க. காரணமான, எண்ணெய் அதிகமுள்ள உணவுகளை தவிர்ப்பது உங்கள் உடல் நலத்துக்கு நல்லது.

# உங்கள் கையில் இந்த ‘H’ ரேகை இருந்தால் 40 வயதுக்குப் பிறகு நீங்கள் கோடீஸ்வரர் தான்..!

ஜோர்திடங்களில் பலவகை இருப்பது நாம் அறிவோம். அதில் பலரும் அதிகம் நம்புவது கைரேகை ஜோதிடம். மது உள்ளங்கை ரேகைகளை வைத்து செல்வம், தொழில், இல்வாழ்க்கை, தனிநபர் குணாதிசயங்கள் கூறப்படும். அந்த வகையில் ஒரு நபரின் உள்ளங்கை ரேகையில் H என்ற எழுத்தை போல ரேகை இருந்தால் அவரது குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என நாம் இனி இங்கு காணலாம்.

“H” ரேகையானது மூன்று ரேகைகளின் இணைப்பில் உருவாகியிருக்கும் ரேகையாகும். இது இதயம், அதிர்ஷ்டம் மற்றும் தலை ரேகைகளின் இணைப்பை கொண்டது.

இந்த “H” ரேகை கொண்டிருப்பவர்கள், அவர்களது வாழ்வில் நாற்பது வயதுக்கு மேல் வெற்றிகரமாக திகழ்வார்கள். நாற்பது வயதுக்கு பிறகு அவரது வாழ்வில் ஒரு பெரிய திருப்பம் உண்டாகும்.

நாற்பது வயதுக்கு மேல் அவர்களது வாழ்வில் திடீர் பொருளாதார எழுச்சி காண்பார்கள். அவர்களது பெரும்பாலான முயற்சிகள் மற்றும் வேலைகள் அவர்களது எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும்.

தாங்கள் விரும்பும், காதலிக்கும் நபர்களுக்கு, எதிர்பார்ப்பை தாண்டி அதிகம் உதவுவார்கள். ஆரம்ப காலத்தில் இவர்களுக்கு அதிர்ஷ்டம் என்று எதவும் உதவி இருக்காது. ஆயினும் இவர்கள் தங்கள் நம்பிக்கையை இழக்க மாட்டார்கள்.

நீங்க நாற்பது வயதுக்கு முன்னே முயற்சி செய்த கடின உழைப்பிற்கான பயன்கள் கூட நாற்பது வயதிற்கு பிறகு உங்களை வந்தே சேரும்.

இந்த “H” ரேகை இருக்கும் நபர்கள் இயற்கையாகவே உணர்ச்சிவசப்பட கூடிய நபர்களாக இருப்பார்கள்.

இவர்கள் எப்போதும் மற்றவர்களுல்க்கு உதவும் மனப்பான்மை கொண்டிருப்பார்கள். இவர்களது தாராள மனதால், மக்கள் இவர்களை ஏமாற்றவும் செய்வார்கள்.

இந்த “H” ரேகை கொண்டிருப்பவர்கள் வாழ்வில் அதிக கடின சூழல்களைக் கடந்து வந்திருப்பார்கள். தடங்கல், இடையூறுகள் என இவர்கள் செல்லும் பயணத்தில் பல இடைஞ்சல்கள் கடந்திருப்பார்கள்.

“H” ரேகை இருக்கும் நபர்கள் அதிக தன்னம்பிக்கை



மற்றும் நேர்மறை எண்ணங்கள் கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் கடினமாக, விடாப்படியாக உழைத்து கொண்டே இருப்பார்கள்.

அறிவாளி என்பதை தாண்டி, இவர்களிடம் புத்திகூர்மை சிறப்பாக இருக்கும்.

# கதிர், சூரி இணைந்து உருவாகும் 'சர்பத்'

பரியேறும் பெருமாள் வெற்றிக்குப் பிறகு கதிர் தற்போது விஜய்யுடன் 'தளபதி 63' படத்தில் நடித்து வருகிறார். இதனைத் தொடர்ந்து 'சர்பத்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இதில் கதிர் உடன் முதல் முறையாக சூரியுடன் இணைந்து நடிக்கிறார். கதாநாயகியாக ரகசியா அறிமுகமாகிறார். முக்கிய கதாபாத்திரங்களில் விவேக் பிரசன்னா, சித்தார்த் விபின், மாரிமுத்து, ஆகியோர் நடிக்கிறார்கள்.

நம் போக்கில் கதையை வளைக்காமல் கதை போகும் வழியில் திரைக்கதையை அமைத்து, படமாக இந்தப் படத்தை உருவாக்கி வருகிறார் இயக்குநர் பிரபாகரன். இசை அமைப்பாளர் சூப்பர் சிங்கர் வெற்றியாளர் அஜிஸ் இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார்.











செங்காந்தள் @kumarfaculty



மொபைல் போன் திருட்டுப் போனால்
திருட்டுக் கொடுத்தவருக்கு களவு போனது.
திருடியவருக்கு களவுப் போன் அது...!!!




தனது நண்பனின் திருமணத்துக்குச் சென்ற அருண் மேடையில் மணப்பெண்ணைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான்.

அருகில் இருந்தவரிடம்

"மணப் பெண் மூஞ்சைப் பாருங்க, ஆம்பளை மாதிரி இருக்கிறாள். என் நண்பன் எப்படித்தான் குடும்பம் நடத்தப் போறானோ?"

அருகில் இருந்தவர் "டேய் , என் மகளைப் பற்றி என்கிட்டயே சொல்றியா?"

"ஐயோ அங்கிள். நீங்கதான் அந்தப் பொண்ணோட அப்பான்னு தெரியாம சொல்லிட்டேன்.. மன்னிச்சுக்கோங்க அங்கிள்!"

"டேய் நான் பொண்ணோட அம்மாடா!!!"

## பொன்மொழிகள்

உங்களுக்கு உதவக்கூடிய கரங்கள் வேறெங்குமில்லை. அவை உங்கள் தோள்களின் மீதுதான் இருக்கின்றன.

**லிடர்மென்.**

துன்பம் ஒரு பழம் போன்றது. தாங்க முடியாத மெல்லிய கிளையில் கடவுள் அதை வளரச் செய்வதில்லை.

**உய்கோ.**

நான் துப்புரவுத் தொழிலாளியாக இருந்தாலும்கூட அந்த வேலையிலும் நானே சிறந்த துப்புரவுப் பணியாளனாக இருப்பேன்.

**சுவாமி விவேகானந்தர்**

கடமையைச் செய்யும்போது மகிழ்ச்சியாகச் செய்யவில்லையென்றால், அதன் முடிவும் மகிழ்ச்சியாக இருக்காது.

**நெப்போலியன் ஹில்.**

மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின் மூலமாகத்தான் தேடிக் கொள்கிறான்.

**ரேபியா.**

புத்தகங்கள் மிகவும் விந்தையானவை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்பவரிடமும் நூற்றாண்டுக்கு முன்னால் வாழ்ந்தவர்க்ளிடமும் நாம் நேரிடையாக உரையாடி இன்பமுறச் செய்பவை புத்த கங்களே.

**கிங்ஸ்லி.**

இந்தச் சிக்கல் கடினமானது என்று சொல்லாதீர்கள். கடினமாக இல்லாவிட்டால் அது சிக்கலே இல்லை.

**ஃபோஷ்.**



ஜப்பானைச் சேர்ந்த டெட்சுயா என்ற 84 வயது தாத்தா, இன்ஸ்டாகிராமில் வைரலாகி வருகிறார். விதவிதமான உடைகளில் அவரது ஒளிப்படங்களுக்குப் பாராட்டுகள் குவிந்துவருகின்றன.

தாத்தா டெட்சுயா, அகிடா நகரில் வசிக்கும் தன் பேரன் நவோயா கூடோவின் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்தார். அப்போது, தன்னிடமுள்ள புதிய நவநாகரிக உடைகளை தாத்தாவுக்கு அணிவித்துப் பார்க்க விரும்பினார்.

அந்த உடைகளோடு தாத்தாவை விதவிதமாக ஒளிப்படம் எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவேற்றினார். அவரது ஒளிப்படங்களுக்கு எதிர்பாராத எண்ணிக்கையில் பார்வையாளர்கள் குவிந்தனர். ஒரே வாரத்தில் அவருடைய பக்கத்தை பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது.

ஒளிப்படங்களில் தோல் ஆடைகள், முரட்டுத்தனமான தோற்றம் தரும் அணிகலன்கள், ஆடைகளை அணிந்து மிகவும் ஸ்டைலாகக் காட்சி தருவது, அனைவரையும் பிரமிக்க வைத்தது.

நவநாகரி உடைகளில் தாத்தா இளமை மிடுக்கோடும், அழகோடும் இருப்பதாகவும், அவரது ஆர்வத்தைப் பார்க்கும்போது 84 வயது தாத்தா என்பதை நம்பவே முடியவில்லை எனவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.




## 'இன்ஸ்டாகிராமில்' கலக்கும் 84 வயது ஜப்பான் தாத்தா!

twitter



# பூனையும் அதன் நிழலும்


முட்டாள் பூனை ஒன்று ஒரு வீட்டில் இருந்து பெரிய கருவாட்டுத் துண்டொன்றைத் திருடியது. அதனைப் பத்திரமாகக் கௌவிக் கொண்டு தன் இருப்பிடம் புறப்பட்டது.
செல்லும் வழியில் சில பூனைக்குட்டிகள் அந்தப் பூனையிடம் கருவாட்டுத் துண்டைத் தருமாறு கேட்டன. ஆனால் அந்த முட்டாள் பூனையோ இதை நான் எவருக்கும் தரமாட்டேன். முழுவதையும் நான் மட்டுமே சாப்பிடப் போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றது.
செல்லும் வழியில் அந்தப் பூனை ஒரு பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. பூனை பாலத்தைக் கடக்கும்போது கீழே தண்ணீரைப் பார்த்தது. தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது. நீரில் தெரிந்த அதன் உருவத்தின் வாயிலும் கருவாட்டுத் துண்டு இருந்தது.
அதைக்கண்ட பூனை "இந்தப் பூனையிடம் ஒரு பெரிய கருவாட்டு துண்டு உள்ளது. இதையும் அபகரித்து விட வேண்டும்"என்று நினைத்தது. உடனே அது பலமாக "மியாவ்"எனக் கத்திக் கொண்டே தண்ணீரில் தெரிந்த பூனையின் மீது பாய்ந்தது. அதனால் அதன் வாயில் இருந்த கருவாட்டுத் துண்டும் தண்ணீரில் விழுந்தது. தண்ணீரில்தான் விழுந்த பின்பே அந்த முட்டாள் பூனைக்கு விடயம் புரிந்தது. அது தன் நிழல் பிம்பம் என்று.



பெரிய கருவாட்டுத் துண்டைத் தேடிச் சென்ற பூனை தண்ணீரில் தத்தளித்து. மிகவும் துன்பத்துடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று கரையேறியது அந்த முட்டாள் பூனை.

"பேராசை பெரு நட்டம்"


## சரியான நிழலை கண்டு பிடிப்போம்




## பொது அறிவு

1. நெருப்புக்கோழி மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்.
2. பூனையின் ஆயுட்காலம் 12 வருடங்கள்.
3. பறவைகளிலேயே மிகவும் நீளமான நாக்கு உடையது.. மரங்கொத்தி.
4. பூச்சி இனங்களில் அதிக அறிவு உடையது எறும்பு.
5. நீரைவிட குருதிக்கு 6 மடங்கு அடர்த்தி அதிகம்.
6. தவளை, தன்னுடைய கண்கள் மூலம் ஒலியைக் கேட்கிறது.
7. சிப்பியில் முத்து உருவாக சுமார் 15 ஆண்டுகள் ஆகும்.
8. வரிக்குதிரை ஆபிரிக்க கண்டத்தில் மட்டுமே காணப்படுகிறது.
9. பச்சோந்தியின் நாக்கு, அதன் உடலைப்போன்று இரண்டு மடங்கு நீளமாக இருக்கும்.
10. வாசனைப் பொருள்களின் 'ராணி' என அழைக்கப்படுவது ஏலக்காய்.
11. அன்னாசிப் பழத்தில் விதை கிடையாது.
12. தேனீக்களுக்கு 5 கண்கள் உள்ளன.
13. அமெரிக்க காந்தி என அழைக்கப்பட்டவர் மார்ட்டின் லூதர்கிங்.
14. புறாப் பந்தயம் தோன்றிய இடம் பெல்ஜியம்.
15. எரிமலை இல்லாத கண்டம் ஆஸ்திரேலியா.
16. நாய்க்கு வியர்ப்பது கிடையாது.
17. விதையில்லாமல் முளைக்கும் தாவரம் தர்ப்பைப்புல்.
18. ஆரிய இனத்தவர்களின் தாயகம் மத்திய ஆசியா.
19. முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு இந்தியா.
20. பச்சையம் இல்லாத தாவரம் காளான்.
21. பாம்பு நாக்கால் வாசனையை நுகரும் திறன் கொண்டது.
22. ஜப்பான் மீது வீசப்பட்ட முதல் அணுகுண்டு 'லிட்டில்பாய்'.

## புள்ளிகளை இணைத்து உருவத்தை பூர்த்தி செய்வோம்



## சிந்தனை துளிகள்

- எங்கே விழுந்தாயெனப் பார்க்காதே. எங்கே வழுக்கினாயெனப் பார்.
- யாராவது விழுவதற்கு குழி தோண்டப் போகிறாயா? அதைஇரண்டாகத்தோண்டு உனக்கும் சேர்த்து.
- முன்னோக்கிச் செல்லும் போது கர்வமாயிராதே! கனிவாயிரு. ஒருவேளை நீ பின்னோக்கி வர நேர்ந்தால் யாராவது உனக்கு உதவுவார்கள்.
- எந்தச் செயலையும் செய்யுமுன் எவரிடமும் சொல்லாதே. செய்து முடித்து விட்டு தைரியமாகச் சொல். ஏன் தெரியுமா? செய்வதில் வெற்றி பெற்றால் கேட்பவன் யோசிப்பான். தோல்வியடைந்தால் விமர்சிப்பான்.

# இலங்கையின் தொடருந்து சேவை

இலங்கையின் தொடருந்துப் போக்குவரத்து, இலங்கையைப் பிரித்தானியர் ஆண்ட காலத்தில், தொடங்கப்பட்டது.
1850ஆம் ஆண்டுகளில் இது பற்றிய எண்ணம் உருவானபோதும், 1864 ஆம் ஆண்டு டிசெம்பர் 27 ஆம் திகதி, கொழும்புக்கும், அம்பேபுசைக்கும் இடையில் அமைக்கப்பட்ட 54 கிலோமீற்றர் நீளமான பாதையில் முதலாவது சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் கண்டிக்கு 1867 ஆம் ஆண்டிலும், காலிக்கு 1894 ஆம் ஆண்டிலும், நீர்கொழும்புக்கு 1909 ஆம் ஆண்டிலும் சேவைகள் ஆரம்பித்தன.
இலங்கையின் தொடருந்துப் பாதைகள் அனைத்தும் 5அடி 6அங்குலத்தில் அமைந்தவை.
தலைநகரான கொழும்பில் இருந்து பல்வேறு நகரங்களை நோக்கி விரிந்து செல்கின்றன.
இந்த வலையமைப்பானது ஒன்பது பாதைகளைக் கொண்டுள்ளது. இவை, வடக்கில் காங்கேசன்துறை, தலைமன்னார் ஆகிய இடங்களிலும், கிழக்கில், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும், மலையகப் பகுதியில், மாத்தளை, பதுளை ஆகிய இடங்களிலும், தெற்கில் மாத்தறையிலும் மேற்கில் அவிசாவளை, புத்தளத்திலும் முடிவடைகின்றன.
வடக்கு நோக்கித் திருகோணமலைக்கும், தெற்கு நோக்கி மட்டக்களப்புக்கும் செல்கின்றன. வடக்கு மாகாணம் நோக்கிய பாதையில் மதவாச்சி என்னும் இடத்திலுள்ள சந்தியில் ஒரு பாதை மேற்குப் பகுதியை நோக்கித் தலைமன்னார்பாலம் வரை செல்கிறது. மதவாச்சியிலிருந்து வடக்கே செல்லும் பாதை வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஊடாகக் காங்கேசன்துறையை அடைகின்றது. முதலாவது குறுகிய தொடருந்து பாதை(களனிப்பள்ளத்



தாக்குப் பாதை) 1900ஆம் ஆண்டில் மருதானையிலிருந்து அவிசாவளை,எட்டியாந்தோட்டை வரை அமைக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

# சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள்



கோப்பாய் மத்தியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் நேற்று (21.06.2019) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தாந்தபானு சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் இரத்தின சௌந்தரம்மா தம்பதிகளின் ஜேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான அளவெட்டி பெருமாக்கடவை சண்முகக்குருக்கள், இராமலட்சுமி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கோமளாம்பிகை அம்மாவின் அன்புக்கணவரும் சுசீந்திரராஜக்குருக்கள் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் கட்டடத்திணைக்களம் யாழ்ப்பாணம்), மஞ்சுஸ்ரீ, சுரேந்திரக்குருக்கள் (கனடா), சுஜீவகுமார் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேசசெயலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் கௌசல்யா (ஆசிரியை , நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை), கௌரிபாலக் குருக்கள், நாகலட்சுமி, ஸ்ரீவித்தியா (ஆசிரியை, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுருதிசாகரசர்மா, சுருதிலோஜிதசர்மா, சுருதிஸ்வரூப சர்மா, லாவண்யா, சரண்யா, சுப்பிரபாதசர்மா, கௌசல்யா, பாரத்வாஜசர்மா, சோமவித்வேஸ்வரசர்மா, அபர்ணா, அஸ்விதா, அப்ஜா, அத்வைதா, சிவோதயசர்மா, கலாத்மிகா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2019) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் கோப்பாய் பிரதேசசெயலகத்திற்கு அருகிலுள்ளசெல்வ விநாயகர் ஆலய வடக்குவீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சோ.சுசீந்திரராஜக்குருக்கள்**
**077 158 1005, 077 189 6632**

**செல்வ விநாயகர் கோவிலடி,**
**கோப்பாய் வடக்கு.**



திருமதி

# குணபாலசிங்கம் உருத்திராட்சரூபவதி (தேவி)

அச்சுவேலி கதிரிப்பாயை பிறப்பிடமாகவும் திருப்பூர் மயிலிட்டியை வதிவிடமாகவும் கதிரிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணபாலசிங்கம் உருத்திராட்சரூபவதி (தேவி) கடந்த (20.06.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அருணாச்சலம் குணபாலசிங்கத்தின் பாசமிகு துணைவியாரும் காலஞ்சென்ற இந்திரலிங்கம், சுந்தரலிங்கம், கணேசலிங்கம், இரத்தினலிங்கம், பரமலிங்கம் (கனடா), குலரூபவதி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அருண் (பிரான்ஸ்), அருண்குமார் (பிரான்ஸ்), அருண்ரமேஸ், அருண்மதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா (பிரான்ஸ்), சப்பரினா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியங்கா, பிருந்தா, பிரவீன், தேவிசூரியா, ஊசோ, அலெக்சி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தனுசியா, கௌரிசங்கர் ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கதிரிப்பாய் இந்துமயானதில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மருத்துவர் ஷாபி விவகாரத்தில் வசந்த கீத்சிறியிடம் வாக்குமூலம்!

கொழும்பு, ஜூன் 23

மருத்துவர் மொஹம்மட் ஷாபி விவகாரம் தொடர்பாக குருணாகல் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வசந்த கித்சிறி ஜயலத்திடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சிறப்பு விசாரணை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகமான நான்காம் மாடியில் உள்ள சமூக கொள்ளை தொடர்பான விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட அவரிடம் அங்கு 8 மணி நேர விசாரணை நடத்தப்பட்டு சிறப்பு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரிகளை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. வருமானத்தை மீறி சொத்து சேர்த்த குற்றச்சாட்டில் மருத்துவர் மொஹம்மட் ஷாபி சி.ஐ.டியில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகிறார். அவர் மீது சட்டவிரோதக் கருக் கலைப்புக் குற்றச்சாட்டும் சுமத்தப்படுகின்றது.

சிங்கள, பௌத்த பெண்களுக்கு கருத்தடை செய்தார் என்று தேசிய பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்திக்கான ஆரம்ப தகவலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் வழங்கினார் என்று கூறப்படும் விடயம் மற்றும் மருத்துவர் ஷாபி குறித்து சட்ட விரோத சொத்துக் குவிப்பு தொடர்பை மையப்படுத்தி பிரதி பொலிஸ் மா அதிபர் முன்னெடுத்த விசாரணைகள் தொடர்பாக இதன்போது விரிவாக விசாரிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயலத்திடம் வாக்கு மூலம் ஒன்றைப் பதிவு செய்துகொண்டுள்ளதுடன், அவசியம் ஏற்படும் பட்சத்தில் மீளவும் விசாரணைக்கு அழைப்பு விடுவிக்கப்படும் என்று குற்றப்புலானய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## காணிப் பயன்பாடு சட்டத்தை நீக்குவது பெரும் குற்றமாகும்

*அரச தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 22

காணி சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, பி.ஹரிசன், கயந்த கருணாதிலக்க, தயா கமகே ஆகியோரும் விஜயதாச ராஜபக்ஸ மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

அதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

காணி பயன்பாடு தொடர்பான சட்டங்களை நீக்குவது பெரும் குற்றமாகும். பயன்பாட்டுக்கு சட்டம் இருக்க வேண்டும். காணிகளை துண்டாக்குவதற்கு பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டாம். பெரும் அழிவையே அவர்கள் செய்கின்றனர். துண்டாக்கி விற்பனை செய்கின்றனர். தவிசாளர்களின் பைகளை நிரப்பிக்கொள்கின்றனர். எனது அவதானிப்புகள் அனைத்தையும் ஏற்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் என்னால் இயங்க முடியாது - என்றார். (ஏ)

## Vacancies

**Neilly Davies Consulting Engineers Lanka Pvt Ltd is seeking for young & dynamic employees with fluent English skills with good leadership quality for the below positions;**

Draftsman
- National certificate in technology (NCT)- Draftsperson with software skills and working experience in building sector with minimum 1 year.
- Excellent drafting skills such as AUTOCAD and similar software.
- Responsible for producing Civil, Structural & Technical drawings from given architectural details.
- Good command of written and spoken English.

Technical Officer cum Quantity Surveyor
- National certificate in technology NCT (civil) or NCT (QS) or equivalent from a recognized institute.
- Minimum 1year experience in building sector.
- Good command of written and spoken English.

*Interested candidates are required to send the CV to the bellow email address within 7 days.
info@neillydavies.lk or
M.S.Seyon@neillydavies.lk

neillydavies
NeillyDavies Consulting Engineers Lanka Pvt ltd
39, Pirappamkulam Road, Vannarponnai
Jaffna.
021 221 4401 or 0776408692

## மரண அறிவித்தல்

# தர்மலிங்கம் தவபாலன் ஜோர்ஜ்



பிறப்பு 30.11.1948 இறப்பு 19.06.2019

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி, மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தவபாலன் ஜோர்ஜ் கடந்த (19.06.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மேரியசிந்தாவின் அன்புக்கணவரும் கிறிஷாந்தி (உதயன் நாளிதழ்), துஷாந்தி (பிரான்ஸ்), லக்ஷாந்தி (மக்கள் வங்கி), தனுஷாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிஷாந்தன் (ஆசிரியர், புனிதபத்திரிசியார்கல்லூரி), மரியடிலோஜன் (பிரான்ஸ்), சகிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரின் ஏட்றியன், கரீஷா, கஷ்வின், ரிகாஷா ஆகியோரின் அன்பு பேரனும் தர்மறோகினி (ரதி), தனக்குமார் றெரன்ஸ் (ரவி), தனசீலி (ரஜி) காலஞ்சென்றவர்களான தனபாலன், தனசீலன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான தேவதாஸ், அருள்தாஸ் மற்றும் மேரிராணி, விமலதாஸ், செபரட்ணதாஸ், ஜீலியன்ஜீவதாஸ் (ஜீவன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஷிக்கா, நிருபா, சஞ்சிகா, ஷாம் டிமுத், யசித்நரோன், டிலான், டன்ஸ்ரன், டெஸ்மன், ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இறுதி ஆசீரினைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 47/1, மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 221 9872, 077 210 9365**

**மணமகன் தேவை**

1989 July, யாழ் இந்து10ல் சூரியன், செவ்வாய், 51 - 1/2 பாவம், உத்தராடம் 4ம் பாதம், A/L வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

**0767 113 052**

**கணிதம், வரலாறு 06 - O/L வகுப்புக்கள்**

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ, வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய, மாவட்ட சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டுபவர்.

**077 968 2097**

**கடை விற்பனைக்கு**

சுன்னாகம் K.K.S வீதியில் கொமர்ஷல் வங்கிக்கு அருகில் கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர்

**077 765 3817/ 071 994 2118**

ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

**தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு கணக்காளர் (Accountent) தேவை.
**தகைமை :** A/L (Commerce) கணினித்துறையில் அனுபவம்.

**076 316 5730, 077 592 5371**
E.mail-careers@decon.lk

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 01 . 1955



மறைவு 22 . 06 . 2017

## திருமதி திருச்செல்வம் நாகம்மா

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்......

உரம்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1930



மறைவு 20 . 06 . 2019

## காசிப்பிள்ளை மூத்ததம்பி
### (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை மூத்ததம்பி (முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) கடந்த (20.06.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நிற்சிங்கர்-சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், நாகம்மா மற்றும் நல்லதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசராணி (ஜேர்மனி), கணேசரஞ்சன், கணேசகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசராஜா (ஜேர்மனி), விமலராணி, கலைராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், பிரகாஷ், பிரவீணா, பிரசாந், மிதுரன், மதுஷன், மானசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்.

**தொ.பே.இல: 021 790 1447**

# மரண அறிவித்தல்

## செல்லையா சிவலிங்கம்
### (செல்லையா சிவலிங்கம் நகை மாளிகை)



மண்கும்பான் மேற்கு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவலிங்கம் நேற்று (21.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் (செல்லையா அன் சன்ஸ்), இந்திரசித்து (முன்னாள் உரிமையாளர் லலிதா ஜீவல்லறி) மற்றும் தங்கமலர், சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் நகை மாளிகை), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரிமளா (பிரான்ஸ்), சியாமளா (நோர்வே), கோமளேஸ் (சுவிஸ்), நிரஞ்சலா (லண்டன்), சிவரஞ்சினி, அஜந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்ற நடராசா (மைதிலி நகைமாட ஸ்தாபகர்) மற்றும் மகுடராணி, காலஞ்சென்ற பூலோகநாதன் (குமரன் ஸ்ரோர்ஸ் நாரம்மல), மற்றும் சுந்தரலிங்கம், இராஜலிங்கம் (முருகன் ஸ்ரோர்ஸ் நாரம்மல) காலஞ்சென்ற அன்னலிங்கம், மற்றும் ஞானேஸ்வரன்(கனடா) ஆகியோரின் மைத்துனரும் சிவனேசன் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (நோர்வே), பாலசிங்கம் (சுவிஸ்), சிவதாஸ் (லண்டன்), ஆனந்தன் (மைதிலி நகை மாடம் pvt ltd, யாழ் மைதிலி ஜீவல்லறி கொழும்பு), ஜெகானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திவ்யபிரசாத், கஜலக் ஷன், ரனுஜன் (பிரான்ஸ்), சுவாதி, சுவேகா, சுஜிதன் (நோர்வே), ரொஷானா, சுஜீனா (சுவிஸ்), பிரனீஸ், பிரிதிகா, பவிகா (லண்டன்), சனுஜா, வினுஷன் ஹரிஸ் (யாழ்ப்பாணம்), கவினாஷ், கிசோனா, அக்சிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(IN 9987)
(14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

**021 222 4139/ 077 376 8952**

**ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்**
**35 ஆவது சைவசமய அறிவுப்போட்டி, விளையாட்டுப்போட்டிக்கான பரிசளிப்பு விழா - 2019**

**இடம்:** ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய முன்றல்
நாச்சிமார் கோயிலடி, வண்ணார்பண்ணை
**காலம்:** 23.06.2019 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** பி.ப 2.30 மணி

**பரிசில் பெறும் மாணவர்கள் 2.00 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**ஸ்ரீ காமாட்சி சனசமூக நிர்வாகத்தினர்**

# வவுனியாவில் பெண் சாவு கொலை எனச் சந்தேகம்

வவுனியா, ஜூன் 22

வவுனியா, செட்டிக்குளம் பிரதேசத்தில் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவர் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார் என்றும், 4 பிள்ளைகளின் தாயாரான இவர் தனியான வீட்டில் வசித்து வரும் நிலையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
### சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ்.ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ். கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், காங்கேசன்துறை, மல்லாகம், உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, மருதனார்மடம், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்.பிராந்திய முகாமையாளர் விடுதி மற்றும் யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/= ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2019 ஆடி மாதம் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 - பி.ப 4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2019 ஆடி மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**Fax : 021 - 2222602**
**Email : jafrho@peoplesbank.lk**

## வீடு வாடகைக்கு
யாழ்: நகர் மத்தியில் 4 அறை இரு விறாந்தை வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு - 077 331 9118

## சமையலாள் தேவை
Restaurant ஒன்றிற்கு சமையல் வேலைக்கு ஆள் தேவை.
(ஆண்கள் மட்டும்)
075 777 6047
(CS 26184)(4.17)

## தவறவிடப்பட்ட தொண்டராசிரியருக்கான அவசர கலந்துரையாடல்
காலம் : 22.06.2019
நேரம் : பிற்பகல் 1.00 மணி
இடம் : கூட்டுறவாளர் மண்டபம், கிளிநொச்சி.
அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.
செயலாளர்
ப.கோகுலன்
(AKN 740)(4.17)

## வாடகைக்குக் கொடுக்கப்படும்
யாழ்.கஸ்தூரியார் வீதியில் நகைக் கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
077 693 5610

## மணமகள் தேவை
1977 இல் பிறந்த கத்தோலிக்க மதத்தைச்சேர்ந்த ஆசிரியருக்கு 1981இற்கு பின்னர் பிறந்த மணமகள் தேவை.
தொடர்பு - 077 926 1868

## புறொயிலர் விற்பனைக்கு
பெரிய புறொயிலர் கோழி
மொத்தக் கொள்வனவுக்கு
1kg - 280 /=
ஐங்கரன் பாம்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
077 905 0165

## வாடகைக்கு உண்டு
வண்ணார்பண்ணை (யாழ்.நகரிலிருந்து 2km) லோட்டஸ் வீதியில் 7½ பரப்புக் காணியில் அமைந்த 5 அறைகள் மற்றும் நவீன குளியலறை வசதியுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உள்ளது. (காணிக்குள் தென்னை உள்ளிட்ட பலன் தரக் கூடிய மரங்கள் உள்ளது.)
077 123 0294

## வீடு வாடகைக்குத் தேவை
நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 3அறைகள் இணைந்த குளியல் அறையுடன் கூடிய வீடு தேவை.
பிறவுண் வீதி, நாவலர் வீதி, K.K.S வீதி, கொக்குவில் பகுதி விரும்பத்தக்கது.
தொடர்பு : 075 045 8213
021 221 9806

## வேலையாள்கள் தேவை
A9 வீதி முருகண்டி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள
**சைவ உணவகம், ஐஸ்கிறீம்** உற்பத்தி நிறுவனத்துக்கு
- ஐஸ்கீறீம் உற்பத்தியாளர்
- உதவியாளர்
- காசாளர்
- விற்பனை பிரதிநிதிகள்
- உணவுபரிமாறுபவர் (Waiter)
- சிட்டை எழுதுனர்

ஆண், பெண் இருபாலாரும் தேவை. பழகவிரும்புபவர்களும், அனுபவம் உள்ளவர்களும் உடன் தேவை.
தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்
077 3866 250

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**
**"DEVELOPMENT OF NOVEL ELECTROLYTE AND ELECTRODE MATERIALS FOR SECONDARY SODIUM - ION AND MAGNESIUM - ION BATTERIES"**

**VACANCIES FOR THE POST OF RESEARCH ASSISTANT - 02 POSTS**
**FULL TIME - ON CONTRACT**

The University of Jaffna, Sri lanka wjll entertain applications for the above - mentioned post from suitably qualified persons up to 05th July 2019 for the above Research Project, Faculty of Science under the AHEAD Operation.

Applicants who are interested in the avobe posts are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

**Registrar.**

## மரண அறிவித்தல்
## விசுவநாதி செல்லப்பா
*(இளைப்பாறியஅதிபர்)*



தோற்றம் 13.07.1929 மறைவு 17.06.2019

யாழ். சாவகச்சேரி மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதிசெல்லப்பா (இளைப்பாறிய அதிபர்) கடந்த (17.06.2019) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான விசுவநாதி - சிதம்பரம் தம்பதிகளின் அன்புப் புத்திரரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பரத்தினத்தின் அன்புக் கணவரும் சுகிர்தமலர் (இருபாலை), சுகிர்தராசா (கனடா), சுகிர்தரத்தினம் (கனடா), திருக்குமரன் (கனடா), சேந்தா (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின்பாசமிகுதந்தையும் சிவபாலசுந்தரம் (இருபாலை), ரஜினிதேவி (கனடா), ஜெயசீலி (கனடா), ஜெயச்சந்திரன் (கனடா), தேனுஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சபாபதி, வள்ளியம்மை (கந்தரோடை), காலஞ்சென்ற மாரிமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் ரசீக்கா, அஸ்வின், அர்ஷன், காயத்திரி, சம்சனா ஆகியோரின் அன்புபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். தகவல்: **சிவபாலசுந்தரம் சுகிர்தமலர் (மகள்)**
**இருபாலை** 077 671 8763

## மரண அறிவித்தல்



மலர்வு 05 . 05 . 1962 உதிர்வு 20 . 06 . 2019

## பொன்னுத்துரை சிவகுமார் (பாலா)

இல.07, ஸ்ரான்லிக்கல்லூரி வீதி, நல்லூர் தெற்கைப் பிறப்பிடமகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவகுமார் (பாலா) 20.06.2019 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் சந்திரவதனியின் (சுவிஸ்) அன்புக்கணவரும் ஷாஜினியின் பாசமிகுதந்தையும் அமிதாப்ராதாவின் மாமனாரும் சுந்தரலிங்கம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற யோகராஜா மற்றும் புவனேஸ்வரி, பத்மநாதன் (ஜேர்மனி), தர்மேந்திரன், கருணாதேவி, தர்மகுலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சித்திரா, இராசையா, ஈஸ்ரா, மற்றும் வசந்தரூபி, சுகிர்தா தேவி, குகனேஸ்வரன், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.07, ஸ்ரான்லிக்கல்லூரி வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.**
தகவல்: **குடும்பத்தினர்.**
**0212227056**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களின் எச்சரிக்கை!

கல்முனைதமிழ் உபபிரதேசசெயலகவிவகாரம் மேலும் தீவிரமாகி இருக்கின்றது. இலங்கையின் தலைமை அமைச்சரின் வாக்குறுதிகளையோ கொழும்பு அரசு மற்றும் அதனோடு சேர்ந்தியங்கும்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினதோவாக்குறுதிகளைத் தாம் நம்பப் போவதில்லை என்பதில் கிழக்குத் தமிழர்களில் ஒரு பகுதியினர் மிகத் தீவிரமாக இருக்கின்றனர்.

கல்முனைவிகாராதிபதியான ரண்முத்துக்கலசங்கரத்னதேரர் தொடக்கிவைத்தபட்டினிப்போராட்டத்தைநிறுத்தப்போவதில்லை என்பதில் தமிழர்களும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினரும் விடாப்பிடியாக நிற்கின்றனர்.

தமிழ் உபபிரதேசசெயலகம்தனியானபிரதேசசெயலகமாகச் சகல வழிகளிலும் தரமுயர்த்தப்படும் என்றும் அந்தப் பணிகளைமுடிப்பதற்கு 3 மாதகால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்த கடிதத்தை எடுத்துக் கொண்டு போராட்டக் களத்திற்கு வந்திருந்த அமைச்சர்களான மனோகணேசன், தயா கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்று போராட்டக் களத்திற்குச் சென்ற சமயம் வேண்டத்தகாத சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தலைமைஅமைச்சர்கேட்டகாலக்கெடுவைவழங்கமுடியாது என்றும் உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் அரசிதழ் அறிவித்தலை உடனடியாக விடுத்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஏமாற்றுக்காரரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நம்பிப் போராட்டத்தைக் கைவிட முடியாது என்பது அவர்களின் வாதம். அதில் தவறு இருப்பதாகவும் தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கானதீர்வின் அடிப்படையாகப் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று வாக்குறுதியளித்தவர்தான் ரணில். ஆனால் இதுவரையில் அதனைநிறைவேற்றவில்லை. சில வாரங்களுக்கு முன்னர்வரையில், யார் எதிர்த்தாலும்புதிய அரசமைப்பைநிறைவேற்றியேதீருவோம் என்று ஊடகங்களிடம் சூளுரைத்து வந்தவரானதலைமைஅமைச்சர் இப்போது அந்த முயற்சியில் இருந்து முழுவதுமாகப் பின் வாங்கிக்கொண்டு விட்டார்.

அப்பேர்ப்பட்டவரை நம்பி, 3 மாதங்களுக்குள் கல்முனை தமிழ் உபபிரதேசசெயலகர்பிரிவுப்பிரச்சினைக்கு அவர்தீர்வு காண்பார் என்பதைத் தமிழர்கள் நம்ப வேண்டும் என்று எதிர்பார்ப்தே சிறுபிள்ளைத்தனம்தான்.

மக்களைக் காலம் முழுவதும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. பொறுமையிழக்கும்போது அவர்கள் மூர்க்கத்தனமாக நடந்துகொள்வார்கள் என்பதும் எதிர்பார்க்கப்படக்கூடியதே! தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றோம் என்கிற கோபமும் வெறியும் அவர்களை எந்த எல்லைவரைக்கும் தள்ளிச் செல்லும்கல்முனைவிடயத்திலும்அதுவேதான்நடந்துவருகிறது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கொழும்பு அரசுக்கும் அதனோடுசேர்ந்தியங்கும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் முஸ்லிம்காங்கிரசுக்கும் போதியகால அவகாசம் இருந்தபோதும் முத்தரப்பினருமே அதனை இழுத்தடித்து வந்தார்கள். எனவே மக்கள் தொடர்ந்தும் பொறுமை காக்கிறார்கள் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஆகக்குறைந்தது தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் முழுமையான நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள் என்பதும் இந்தச்சம்பவங்களின் மூலம் தெளிவாகின்றது. இந்தக் கோபமும் எதிர்ப்பும் வெறுமனே கல்முனைப் பிரச்சினைக்குரியது மட்டும்தான் என்று நினைத்துவிடக்கூடாது. இனப் பிரச்சினைக்கான தீர்வு, அரசியல் கைதிகள்விடுதலை, காணாமல் போனோர்விவகாரம், படையினர் வசம் இருக்கும் காணிகளை விடுவிப்பது, பௌத்தமயமாக்கல் என்று பலவற்றிலும் ரணில் ஆட்சியும் கூட்டமைப்பும் தோல்விகண்டிருப்பதன் வெளிப்பாடே, மக்களின் கோபமே கல்முனையில் தொடரும் போராட்டங்களும் குழப்பங்களும். எவ்வளவு காலத்திற்குத்தான் மக்களை ஏமாற்ற முடியும். ?

கல்முனை விவகாரத்தில் மட்டுமல்ல, இனிவரும் காலத்தில் வேறு எந்தவிவகாரத்திலும் ரணில் அரசையும் அதற்கு முண்டு கொடுக்கும்தமிழ்க்கூட்டமைப்பையும்நம்புவதற்குத்தமிழ் மக்கள் தயாராக இருக்கமாட்டார்கள் என்பதற்கான உதாரணமாக கல்முனைச் சம்பவத்தை எடுத்துக்கொள்ளலாம்.

முக்கியபிரச்சினைகளுக்குத்தீர்வுகாணாமல்மெத்தனத்துடன் நடந்துகொள்ளும் அரசியல்வாதிகளுக்கான எச்சரிக்கை இது.

" ஊழல் குற்றச் சாட்டுகளை அடுத்து அதிபர் பதவியிலிருந்து ஜேகப் சுமா பதவி விலகினார். அவர் ஆட்சியின்போது ஊழலில் தொடர்புள்ளவர்களைக் களையெடுக்கும் வேலையை ரமபோசா மேற்கொள்வது அவசியம்.



# சிறில் ரமபோசவின் கைகளில் தெ.ஆபிரிக்காவின் எதிர்காலம்

தென்னாபிரிக்காவில் அண்மையில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் சிறில் ரமபோசா வெற்றி பெற்றிருக்கிறார். ஜேகப் சுமாவிடமிருந்து 2018ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நேரடியாக அதிபர் பதவியில் அமர்ந்த ரமபோசா, இம்முறை தேர்தல் மூலம் பதவிக்கு வருகிறார். பொருளாதாரத்தைச் சீர்திருத்துவது, அரசின் நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்டுவது, அரசியல் ஊழல்களுக்கு விடைகொடுப்பது என்ற மிகப் பெரிய சவால்கள் அவருக்காகக் காத்திருக்கின்றன. அரசியல் ஊழல்கள்தான் நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிய தடைக்கல்லாக இருக்கின்றன.

### பெரும்பான்மை வெற்றி

அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகளில் 58 வீதம் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏஎன்சி) கட்சிக்குக் கிடைத்தது. முக்கிய எதிர்த்தரப்பான ஜனநாயகக் கூட்டணி 21 வீதமான வாக்குகளையும், பொருளாதார சுதந்திரப் போராட்ட வீரர்கள் கட்சி 11 வீதமான வாக்குகளையும் மற்றும் சிறிய கட்சிகள் 11 வீதமான வாக்குகளையும் பெற்றிருக்கின்றன. பதிவான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றிருந்தாலும், கடந்த சில தேர்தல்களாக அதன் வாக்குகள் தொடர்ந்து குறைந்துவருவதையும் இங்கே கவனிக்க வேண்டியிருக்கிறது. 2004ஆம் ஆண்டில் 69 வீதம், 2009ஆம் ஆண்டில் 66 வீதம், 2014ஆம் ஆண்டில் 62 வீதமாக இது இருந்தது. நிறவெறி அரசுக்கு எதிராகப் போராடி 1994ஆம் ஆண்டில் மக்களின் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் பெற்ற வெற்றியானது படிப்படியாகக் குறைவதும், கட்சியின் உயர் நிலையில் உள்ளவர்கள் ஊழலில் ஊறித் திளைப்பது அதிகரிப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுகளை அடுத்து அதிபர் பதவியிலிருந்து ஜேகப் சுமா பதவி விலகினார். அவர் ஆட்சியின்போது ஊழலில் தொடர்புள்ளவர்களைக் களையெடுக்கும் வேலையை ரமபோசா மேற்கொள்வது அவசியம்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

தென்னாபிரிக்காவில் வேலையில்லாத் திண்டாட்டம் 27 வீதமாக இருக்கிறது. அரசின் நிதி நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. சமூகநலத் திட்டங்கள் போதிய நிதி ஒதுக்கப்படாமல் வாடுகின்றன. 1.7 கோடி மக்கள் அரசின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் திறமையற்ற நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 'சிலருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ... "ஊழலை ஒழிப்பேன்" என்று தேர்தல் வெற்றிக்குப் பிறகு அறிவித்தார் ரமபோசா. அதை நிறைவேற்ற வேண்டும். கல்வி, சுகாதாரம், மக்கள் நலத் திட்டங்களுக்கு நிதி கிடைக்க வேண்டும் என்றால் உரிய பயனாளிகளுக்கு நிதி நேராகப் போய்ச் சேருவதை உறுதிசெய்ய வேண்டும். வேலைவாய்ப்பில்லாமல் வாடும் இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சித் திறனை அளிக்க வேண்டும். நல்ல நிர்வாகத்தை அளிக்கவும் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தவும் முதலில் கட்சியில் களையெடுப்பை மேற்கொள்ள வேண்டும். இதற்கு ரமபோசா தயங்கக் கூடாது.

நன்றி : தி ஹிந்து



24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்
செய்திகள்

சனிக்கிழமை 22 ஜூன் 2019



# மதத்தின் பெயரில் பிற மதங்களை ஏளனம் செய்வதை நிறுத்தவேண்டும்

## பல்கலைக் கருத்து முன்வைப்பில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

அனைத்துச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன. ஆகவே மதத்தின் பெயரில் ஏனைய சமயங்களை ஏளனம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக சூழலில் பல்லின பன்மத பன்மைத்துவத்தை ஆழப்படுத்தல் தொடர்பான கருத்து முன்வைப்புக்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பேராசிரியர்கள் கலாநிதிகள் உள்ளிட்ட கல்வித் துறையினர் கலந்து கொண்டிருந்தனர். அதில் மேலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

சமயம் என்பது அனைவரையும் பக்குவப் படுத்துவதாக அமைய வேண்டும். ஒரு விடயத்தைத் தூண்டுவதாக அமையக் கூடாது. என் தாய் எனக்கு முக்கியம். உன் தாய் உனக்கு முக்கியம். ஆனால் பிற சமயத்தை இழிவு படுத்துவது, தனது சமயத்தை முன் நிலைப்படுத்த வெளிப்படுத்துவதால் வெவ்வேறு கோணத்தில் பிரச்சினைகள் எழுகின்றன.

தத்தமது சமயத்தை வெளிகாட்ட முற்படும் போது பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஈஸ்டர் வெடி குண்டு தாக்குதலும் அவ்வாறே இடம்பெற்றது. அனைத்துச் சமயமும் அன்பைத் தான் போதிக்கின்றன. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சமய வேற்றுமையை தோற்றுவிக்கக் கூடாது. ஆயுத முனையில் பரப்புப் படாத சமயமாக சைவம் உள்ளது. ஆகவே தனது சமயம் பெரிது என்று பிற மதங்களை நயப்பு செய்ய ஆரம்பிக்கும் போது பிரச்சினை தோற்றுவிக்கப்படுகிறது.

எமது நாட்டில் போர்க் காலச் சூழல் காணப்பட்டபோது எமது உரிமைக்காக மக்கள் மதங்களைக் கடந்து ஒன்றாக நாம் போராடினோம். ஆனால் அதன் பின்னர் இவ்வாறு மதம் மீதமான நயப்பு ஆரம்பித்து. அது பயங்கரவாதம் வரைக்கும் சென்றுள்ளது. ஒரு மதம் இருக்கும் இடத்தில் பிற மதச் சின்னங்களை நிறுவுவது நிறுத்தப்பட வேண்டும். பிறமதம் பரப்புப் படுவது நிறுத்தப்பட வேண்டும். மதத்தின் பெயரில் காணி சுவீகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும்.

பல்கலைக்கழக நடைமுறை தொடர்பில் சில விடயங்களைப் பின்பற்ற முடியும். மதம் சார்ந்த ஆய்வுகளை நடத்த முடியும். விரிவுரையாளர்கள் இது தொடர்பான விடயங்களை முன்னெடுக்க வேண்டும். பாடம் மற்றும் துறை சார்ந்து விடயங்களை விடுத்து பன்மதம் சார்ந்த விடயங்களை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். தமது சமயம் தான் சரியானது என்று நினைப்பவர்கள் தமது மதம் சார்ந்து கூறும் விடயங்களைப் பின்பற்றி தான் உயர்ந்தவராக சமூகத்தில் வாழ வேண்டும் என்றனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் உட்பட பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-7)




# மாணவர்களை முன்வரிசைக்கு அழைத்து வந்த வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் மாணவர்களை முன்வரிசையில் அமர்த்த வேண்டும் என்று அதிகாரிகளிடம் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.


நேற்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அதிகாரிகள் முன்வரிசையில் அமர்த்தப்பட்டிருந்தனர். மாணவர்கள் பின்வரிசையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

நிகழ்வில் கலந்துகொண்டிருந்த வடக்கு மாகாண ஆளுநர் அதைக் கவனித்து உடனடியாகவே மாணவர்களை முன்வரிசைக்கு மாற்றியுள்ளார்.

மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் எப்போதும் பின்புறமே இருக்க வேண்டும். மாணவர்கள்தான் முன்வரிசையில் இருக்க வேண்டும். நான் இந்த விடயத்தை நீண்டகாலமாகவே அதிகாரிகளிடம் கூறி வருகின்றேன். ஆனால் அது செயற்படுத்தப்படுவதில்லை. இனி இந்த நடைமுறையைக் கட்டாயப்படுத்தவுள்ளேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் அங்கு தெரிவித்துள்ளார். (எ)

# பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் குறைந்தளவில் தொடருந்து சேவை

## பொதுமக்கள் சிரமம்



கொழும்பு, ஜூன் 22

தொடருந்து ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது. எனினும் நேற்றுக் காலை அலுவலகத் தொடருந்து உட்பட 10 தொடருந்துச் சேவைகள் நடத்தப்பட்டன என்று தொடருந்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வார நாள்களில் அலுவலகத் தொடருந்துகள் உட்பட 70 தொடருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றபோதும், நேற்று 9 தொடருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன என்று தொடருந்துத் திணைக்களப் பொது முகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தொடருந்து ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பால் நேற்றுக் காலை சேவையில் ஈடுபடவிருந்த 40 தொடருந்துகளின் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, தொடருந்து ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் பயணிகளின் நலன்கருதிச் சிறப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்துச் சபையின் தலைவர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார். அனைத்துப் பேருந்துகளும் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயணிகளின் வசதி கருதி சிறப்புப் போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்னவும் தெரிவித்துள்ளார்.

தொடருந்துச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டதால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டனர். பயணிகள் தொடருந்து நிலையங்களுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது. தொடருந்து நிலையங்கள் பல வெறிச்சோடிக் காணப்பட்டது.

தொடருந்துத் திணைக்களத்தின் சில தொழிற் சங்க ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 48 மணித்தியாலப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தொடருந்துச் சேவைத் தரங்களில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீங்குவது தொடர்பாக அனுமதி பெறப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக நிதி அமைச்சருடன் அவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தபோதும் அது தோல்வியில் முடிந்திருந்தது. அதையடுத்து அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்துப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# பௌத்த தேரர் போராட்டம் நடத்தி பிரச்சினையை அதிகரிக்கின்றார்

## ஹரீஸ் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 22

பௌத்த தேரர் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தி அநாவசியமான பிரச்சினையை ஏற்படுத்துகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை பிரதேசத்தில் 73 வீதமான முஸ்லிம்களும், 23 வீதமான தமிழர்களும் வாழ்கின்றனர். 1989ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது விடுதலைப் புலிகளால் பலவந்தமாக உப பிரதேச செயலகம் அமைக்கப்பட்டது. தமிழ் மக்களின் நிர்வாகம் அதனூடாக மேற்கொள்ளப்பட்டது.

அதில் கல்முனையில் உள்ள முஸ்லிம் மக்களின் கிராமங்கள், வர்த்தக நிலையங்கள், காணிகள், பெறுமதியான சொத்துக்கள் பலவந்தமாக இந்தப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டன. இதனால் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

30 வருடங்களாக ஆட்சிசெய்த அரச தலைவர்கள் மற்றும் அரசுகளிடம் கல்முனை முஸ்லிம்களுக்கான அநீதியை நீக்கி நீதியை வழங்குமாறு கோரினோம்.

இது தொடர்பாக கடந்த இரண்டு மாதத்துக்கு முன்னர் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன, முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தி எல்லை நிர்ணயக் குழுவை நியமித்து அதனூடாக நிரந்தத் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று உறுதியளித்தனர். அமைச்சரின் நிலைப்பாட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் இணங்கியிருந்தோம். இந்தக் குழு இது தொடர்பான வேலைகளைச் செய்துவருகிறது.

அப்படியிருக்கையில் கல்முனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் உணவுதவிர்ப்புப் போராட்டம் நான்கு நாள்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. சுபத்திராராம தேரர் கலந்து கொண்டு இதுவரை உணவு தவிர்ப்பை நடத்தி வருகின்றார். கல்முனை நகரில் அங்குள்ள முஸ்லிம்கள் தமக்கு நீதி வழங்கப்பட வேண்டும் எனக் கோரி அவர்களும் ஒரு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இனரீதியாக நிறுவனங்கள் செயற்பட்டால் நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பாக அமையும். நிலத்தொடர்பற்ற இடங்களை ஒன்றிணைத்து உப காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் நிர்வாகத்துக்கு எதிராக முஸ்லிம்கள் ஒருபோதும் செயற்படவில்லை. இவ்வாறான நிலையில் பௌத்த தேரர் உணவு தவிர்ப்பு அநாவசியமான பிரச்சினையை ஏற்படுத்துகின்றார்.

இன்ரீதியாக பிரதேச செயலகம், மாவட்டச் செயலகங்களை அமைக்க முடியுமா?. நிலத்தொடர்புள்ள இடங்களை அடிப்படையாகக் கொண்டு உப பிரதேச செயலகத்தை அமைப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஹ்ரானின் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தைச் சந்தர்ப்பமாக பயன்படுத்தி எம்மை அழுத்தத்தினுள் தள்ளுகின்றது. கல்முனை முஸ்லிம் மக்கள் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள் அனைவரையும் காட்டிக்கொடுத்துள்ளனர் - என்றார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல்களின் பின் கைதிகளின் விசாரணை மந்தம்

## அவர்களே கூறினரென்று ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 22

அரசியல் கைதிகளின் வழக்குகள் கடந்த காலங்களில் ஆமை வேகத்திலேயே முன்னெடுக்கப்பட்ட நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அரச சட்டத்தரணிகளின் பிரசன்னம் வழக்கு தவணைகளில் முறையாக இடம்பெறுவதில்லை. சில அரச சட்டத்தரணிகளின் கீழ் பணியாற்றும் கனிஷ்ட சட்டத்தரணிகளே பிரசன்னமாகின்றனர். அதனால் வழக்குகளை விரைந்து நடத்துவதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு மகசின் சிறைச் சாலையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.
சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்று கைதிகளைப் பார்வையிட்டேன் அதன்போதே கைதிகள் இந்த விடயத்தைத் தெரிவித்தனர் என்று அவர் தெரிவித்தார்.
கைதிகள் கூறினரென்று அவர் மேலும் தெரிவித்தாவது:
தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்துக்கு தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. குடிதண்ணீர் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக குழாய்க்கிணறு அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் பயன்படுத்திவந்த மைதானத்துக்குள் பிரவே சிப்பதற்கும், சுற்றுப்புறங்களில் நேரங்களை சிறைச்சாலை மருத்துவமனையை விட போதனா மருத்துவமனைக்குச் செல்வதற்கான பாதுகாப்பையும் அனுமதியையும் பெறுவதிலும் தாமதம் நிலவுகின்றது.
தற்போது எமது விடுதலை குறித்து எந்த விதமான கவனத்தையும் எடுப்பதாக இல்லை. பல்வேறு விடயங்களுக்கான தீர்வுகளை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் அவற்றைக் கைவிட்டதன் காரணத்தால் எமது விடுதலை உள்ளிட்ட பல விடயங்கள் இன்று கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆகவே இதற்குரிய பொறுப்பைக் கூறவேண்டும் என்றும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்தனர் என்று சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.
அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு, தன்னாலான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்தேன் என்று அவர்களிடம் கூறினேன்.
தமிழ் அரசியல் கைதிகள் 95பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் இருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (த)

## ‘புதியதும் பழையதும்’ கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜாவின் “புதியதும் பழையதும்” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.
வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வு பெற்ற அதிபரும், மறுமலர்ச்சி மன்றத்தின் பொருளாளருமான ந. சிவசுப்பிரமணியம் , ஆசியுரையை பறாளாய் விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பிறைசூடிக் குருக்களும், வாழ்த்துரையை சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலையின் செயலாளர் கலாபூஷணம் ஆ. கனகரட்ணமும், அறிமுக உரையை ஓய்வுபெற்ற உப அதிபர் வே.சண்முகலிங்கமும் நிகழ்துவர்.
நூலின் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் அச்சுவேலி மத்திய மகா வித்தியாலய ஆசிரியரும், எழுத்தாளருமான சு.சிவனேசராசாவும், நூல் மதிப்பீட்டை கவிஞர் நடராஜா அருள்மொழிச்செல்வனும், ஏற்புரையை நூல் ஆசிரியர் கலாபூஷணம் எஸ்.சிவானந்தராஜாவும் ஆற்றவுள்ளனர். (ஐ)



## ஓட்டுமடம் பிஸ்கால் ஒழுங்கை சீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பிஸ்கால் ஒழுங்கை கிராம எழுச்சித் திட்டத்தின் ஊடாக சீரமைக்கப்பட்டுள்ளது.
குறித்த வீதியால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சிதைவடைந்து காணப்பட்டது.
இந்த நிலையில் தற்போது இவ்வீதியானது உயரமாக்கப்பட்டு தாரிடப்பட்டு முழுமையாகப் சீரமைக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் சிபாரிசில் ஊரெழுச்சி நிதியொதுக்கீட்டின் கீழ் இவ்வீதியானது சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.
குறித்த வீதியின் சீரமைப்புப் பணிகளை யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந் நேரில் சென்று பார்வையிட்டார்.
மிகநீண்ட நாள்களாக சீரமைக்கப்படாத ஒழுங்கையை சீரமைத்து வழங்கியமைக்காக மக்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வாக்காளர் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

## யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
இதுவரை வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அத னைப் பெற்று தங்கள் வாக்குரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர் தல் ஆணையாளர் இ.அமர்ராஜ் அறிவித்துள்ளார்.
ஒவ்வொருவரும் தத்தமது கிராம ஆலுவலகர் ஊடாக தேர்தல் படிவத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் பெறுவதில் சிக்கல்கள் உள்ளவர்கள் உடனடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும்.
கடந்த மே மாதம் 15 ஆம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரைக்கும் வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் விநியோகிக் கப்பட்டது.
இருப்பினும் அப்படிவங்கள் உரிய முறையில் தம்மை வந்தடையவில்லை என்று சில முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.
அந்தப் படிவத்தை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது கிடைக்காதவர்கள் உடனடியாக தத்தமது கிராம அலுவலகர் ஊடாக அப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
வாக்காளர் படிவம் பெற்றுக் கொள்வதில் பிரச்சி னைகள் இருப்பின் யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலக 0212222655 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கும், 021222 8002 என்ற தொலை நகல் இலக்கத்துக்கும், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் முறைப்பாட்டு இலக்கமான 0212225000 என்ற தெலைபேசி இலக்கத்துக்கும் தொர்பு கொண்டு முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும்.
கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-ரி1)




## ‘பொலித்தீன் அற்ற நகரம்’ செயற்றிட்டம் முன்னெடுப்பு

சாவகச்சேரி, ஜூன் 22
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் அற்ற நகரமாக மாற்றுவதற்கான முன்னோடி நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.
சாவகச்சேரி நகர சபையினரும் அந்தந்த வட்டார பொதுமக்களும் இணைந்து வீதியோரங்களில் காணப்படும் பொலித்தீன் கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்தும் பணிகளை நேற்று ஆரம்பித்தனர்.
சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், செயலர் சி.சபேசன் மற்றும் உறுப்பினர்கள், சபை பணியாளர்கள் உட்பட வட்டார மக்கள் இணைந்து பணியில் ஈடுபட்டனர்.
சாவகச்சேரி பெருங்குளம் சந்தியிலிருந்து சாவகச்சேரி நகரசபை வரையான பகுதிகளில் விழிப்புணர்வு பேரணியை நடத்தியதுடன் அப் பகுதி சாலையோரங்களில் காணப்பட்ட பொலித்தீன்களை அகற்றும் பணிகளிலும் ஈடுபட்டனர். சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியோரத்தில் பொதுமக்களால் கொட்டப்பட்ட பெருமளவு பொலித்தீன் பைகள் சேகரிக்கப்பட்டு வாகனங்களில் அப்புறப்படுத்தப்பட்டன. (ஐ-9)



## வீதி சீரமைப்பு ஆரம்ப நிகழ்வு

அளவெட்டி,ஜூன் 22
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி விஸ்வாமில் வீதியின் சீரமைப்பு பணிக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இதன்போது வலிதென் மேற்கு பிரதேசசபை உறுப்பினர்.லோ.ரமணன்.ஓய்வுபெற்ற அதிபர். எஸ்.தலராசா, தொழிலதிபர் .வை.தில்லை யம்பலம்,கிராமமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-63)



## நாட்டுக்குச் சமாதானம், மழை வேண்டி நயினாதீவில் நேற்றுமுன்தினம் யாகம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
நாட்டில் சாந்தி, சமாதானம், சுபீட்சம் வேண்டியும், மழை வேண்டியும் நயினாதீவில் நேற்றுமுன்தினம் வியா ழக்கிழமை யாகம் நடத்தப்பட்டது. நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய குருமணியின் தலைமையில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அந்தண சிவாச்சாரியர்கள் மகா யாகத்தினை நடத்தினர். (ம)

## மாணவரின் கல்வி மேம்பாட்டுக்கு நிதி

யாழ்ப்பாணம்,ஜூன் 22
போரினால் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை சேர்ந்த ஐந்து பிள்ளைகளில், ஒரு பிள்ளையின் கல்வி மேம்பாட்டுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.
லண்டனை சேர்ந்த கு.ரூபாகுமார் குறித்த மாணவருக்கு 10 ஆயிரம் ரூபாவை உதவியாக நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார். (ஐ-222)



சகல அரச அலுவலர்களும்

## போதைப்பொருள் ஒழிப்பு சின்னத்தை அணியவும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்குமாகாணத்தில்உள்ளசகலஅரசஅலுவலர்கள், ஊழியர்களும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான சின்னத்தை ஒரு வாரத்துக்கு அணிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சகலஅரசதிணைக்களதலைவர்களுக்கும்அறிவுறுத்தியுள்ளார்.

தேசியபோதைப்பொருள்ஒழிப்புவாரம்நாளைதொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் குறித்த சின்னத்தை அணியுமாறு அறிவித்துள்ளார்.

அரச அலுவலர்கள் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான சின்னத்துடன் கடமையாற்றுவதுடன் சகல அரச வாகனங்களிலும் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான ஸ்ரிக்கர் ஒட்டப்படவேண்டும். மேற்படிசின்னம்போதையற்றதேசம் எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட வரைபடம். சகல அரக திணைக்களங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்- சிங்களம் ஆகிய இரு மொழிகளை கொண்டதான ஸ்ரிக்கர்களைத்தயாரிப்பதற்குஅரசநிறுவனங்களின்தலைவர், செயலர்கள் துரித நடவடிக்கை எடுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-50)

# பிரதேச சபை மாநகர சபையாகுமெனின் 35 வருடக் கோரிக்கை நிறைவேறாதா?

சுரேஸ் பிரேமச் சந்திரன் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 22

பிரதேச சபையை ஒரே இரவில் மாநகர சபையாகத் தரம் உயர்த்தி மாற்ற முடியுமென்றால் 35 வருடங்களாக கோரிவருகின்ற பிரதேச செயலகத்தை ஏன் தரம் உயர்த்தமுடியாது என்று கேள்வி எழுப்பியிருக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, கல்முனை உப பிரதேச செயலகத்தைஉடனடியாகப்பிரதேசசெயலகமாகத்தரம்உயர்த்தவேண்டுமென்றுவலியுறுத்தியது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின் கட்டப்பிராய் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில்நேற்றுநடத்தியஊடகசந்திப்பில் கட்சியின் சுரேஸ் பிரேம்ச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனையிலுள்ளஉபபிரதேசசெயலகத்தைப் பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்துமாறுகோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 35 வருடங்களாகமுன்வைக்கப்பட்டுவருகின்ற இந்தக் கோரிக்கைள் முஸ்லிம் தலைமைகள் அல்லது முஸ்லிம் மக்களின் எதிர்ப்புக்களால் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுவந்திருக்கின்றது.

இவ்வாறுமுஸ்லிம்தரப்புக்களின்அழுத்தம் காரணமாகஅந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வந்தநிலையில் தற்போதுபெருமளவிலானபோராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்தும் அபகரித்தும் முஸ்லிம் குடியேற்றங்கள் அல்லதுகிராமங்களைஉருவாக்குவதற்காகவே முஸ்லிம் தரப்புக்கள் இதற்குத் தடையாக இருக்கின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் 21 தமிழ்க் கிராமங்கள் முஸ்லிம்கிராமங்களாகமாறியிருக்கின்றன.

இவ்வாறு கிராமங்களை மாற்றியும் காணிகளைஆக்கிரமித்தும்மதத்தலங்களை அகற்றியும் முஸ்லிம் குடி யேற்றங்களைச்செய்துபள்ளிவாசல்களைக் கட்டியிருப்பதாக முன்னாள் அமைச்சரும்ஆளுநருமானகிஸ்புல்லாஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார்.

இதனால் தமிழ் மக்கள் அதிகம் வாழக்கூடிய இந்தப் பிரதேசத்தில் உள்ள உப அலுவலகத்தைப் பிரதேச செயலகமாகத்தரம்உயர்த்தவிடாமல்முஸ்லிம்கள் தடுக்கின்றனர். முஸ்லிம் மக்களுக்காகப்புதியகிராமங்கள்பிரதேசசெயலகங்கள்பிரதேசசபைகள்எல்லாம்உருவாக்கப்பட்டுவந்திருக்கின்றன. ஆனால் தமிழ்மக்களுக்காகஅவைஎதனையும் செய்யமுடியாது என்று அவர்கள் தடுக்கின்றனர்.

இதனைச்சுட்டிக்காட்டிஅல்லதுகண்டித்துப் பேசினால் முஸ்லிம் மக்களுக்கு எதிராகதமிழ்த்தரப்புக்கள்சித்தரிக்கப்படுகின்றனர். ஆகவே முஸ்லிம் தலைமைகள்ஒருஇரவில்செய்யமுடியுமென்றால் 35 வருடங்களாகத்தமிழ்மக்கள்கோரிவருகின்றதை ஏன் செய்யமுடியாமல் இருக்கின்றது?. அரசு நினைத்தால் இதைஉடனடியாகச்செய்யலாம். இதற்கானஅழுத்தங்களை அல்லது குரல்களைகூட்டமைப்பினர்கொடுக்கவேண்டும். வெறுமனே பார்வையாளர்களாக இருப்பதைகூட்டமைப்பினர்தவிர்த்துக் கொள்ளவேண்டும். இந்த நிலையில் அரசு காலதாமதம் இல்லாமல் தரம் உயர்த்தும்படிஎமதுகட்சிகேட்டுக்கொள்கிறது.

ஆனால் நடைமுறையில் இருந்த ஒன்றை தரம்உயர்த்த கூட்டமைப்புத் தலைமைகாத்திரமானமுடிவைஎடுக்கத் தயங்குவதையும் முஸ்லிம் மக்கள் தங்களுக்கு எதிராக வருவார்கள் என்ற அச்சம்காரணமாகஎதனையும்செய்யாமல் இருப்பதையும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஆகவே இதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அனைவரும்எடுத்து பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்றார். (த-ரி1)



## தேர் ஓடும் வீதி அமைக்க 60லட்சம்நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, ஜூன் 22

வடமராட்சிநாகர்கோயில்முருகன்ஆலயத்துக்கு தேர்ஓடும் வீதி அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா 60லட்சம்ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். இந்நிலையில் குறித்த வீதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, வடக்குமாகாணசபைமுன்னாள்உறுப்பினர் எஸ்.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேசசபையின் தவிசாளர் அரியகுமார்மற்றும்பிரதேசசபைஉறுப்பினர்களானபிரசாத் தியாகலிங்கம், சே.கலையமுதன், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரவியராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-70)

## அலங்கார திருவிழா

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி பூநகரி பல்லவராயன்கட்டு மாதிரிக்கிராமம் சிறி நாகபூசணி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி தீர்த்ததிருவிழாவும், 30 ஆம் திகதி சங்காபிஷேகமும் இடம் பெறும் என்று ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (ஐ-222)

# தொண்டராசிரியர் நியமனத்தில் 45 வயதைக் கடந்தோர் ஏராளம்

ஆசிரியர் சங்கச் செயலர் ஸ்ராலின் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்குகிழக்கு மாகாணங்களில் 27ஆம் திகதி நியமனம்வழங்கும்தொண்டராசிரியர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பவர்களில் அதிகமானோர் 45 வயதைக் கடந்தவர்கள். 52 வயதையுடையவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றுஇலங்கைஆசிரியர் சங்கச் செயலர் யோசப் ஸ்ராலின்தெரிவித்தார்.

இவ்வாறு வெளியிடப்பட்ட பட்டியலில் நியமன வயதின் உச்ச எல்லை 45. இந்த வயதைக் கடந்தவர்கள் ஏராளம் பேர் உள்ளனர் என்றும் ஸ்ராலின் கடும்விசனம்தெரிவித்தார்.

மாவட்டத்தின்கல்விவளர்ச்சிக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்மையும் தடையாகவுள்ளது. அதனால் தொண்டராசிரியர்களை உள்வாங்க வேண்டாம் என்று தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றன. வயது கடந்தவர்கள்அரசியல்செல்வாக்கின் அடிப்படையில் நிய மிக்கப்படுகின்றனர்.

இதேநேரம் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் தொண்டராகப் பணியாற்றியநிலையிலும்2015இல் நடைபெற்றநேர்முகத்தேர்வில் தோற்றி சந்தர்ப்பம் மறுக்கப்பட்டவர்களுக்கே நியமனம்வழங்குவதாகக் கூறப்பட்டேஅமைச்சரவை அனுமதி பெறப்பட்டது.

அவ்வாறுஅமைச்சரவைக்குக் கூறிய கூற்று உண்மையானால் 2015ஆம் ஆண்டுஇடம்பெற்றநேர்முகத் தேர்வுப் பட்டியலில் தற்போது நியமனம் வழங்கத் தேர்வான அத்தனை பேரின் பெயர் விவரங்களும்இருத்தல்வேண்டும். 2015ஆம் ஆண்டு நேர்முகத் தேர்வுபட்டியல்எம்மிடமுள்ளது. தற்போது நியமனம் வழங்கத் தேர்வுசெய்யப்பட்டவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலேயே வந்துள்ளனர்.

எதிர்காலத்தில் எழும் அத்தனை பிரச்சினைகளுக்கும் இந்த நியமனத்தை வழங்கும் அதிகாரிகளும் அரசுமே பதில்கூற வேண்டும்.

### இழி செயல்

இவ்வாறான செயற்பாடு நிச்சயமாகஆசிரியர்களின் தரத்தைக்குறைக்கும். இவ்வாறானவர்கள் ஆசிரியர் சேவையின் மகத்துவத்தைஅறியமுன்பேஓய்வூதியத்துக்குச்சென்றுவிடுவர்.

இவர்கள் புரியும் இழி செயலால் நிச்சயமாக ஆசிரிய சமூகம் பழிச் சொல்லைச் சுமக்க நேரிடும். இது அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியை அதிகரிக்க மேற்கொண்ட செயல்.

உண்மையில் இவர்கள் தற்போதுவரையில்பாடசாலையில் தொண்டராக இல்லை. அவ்வாறுஇருப்பதானால்இவர்களின்அடையாள அட்டை இலக்கத்தை ஊழியர் சேமலாப நிதி யத்துக்கு அனுப்பி எத்தனை பேருக்கு கடந்த மாதம் வரை ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட்டுள்ளது. என்பதனை பரிசீலிக்கத் தயாரா என்று நாம் சவால் விடுக்கின்றோம்.

### கடையில் நின்றோருக்கும் நியமனப் பத்திரம்

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் போர்க் காலத்தில் வழங்கிய சலுகையை அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் தமது தேர்தல் வெற்றிக்காக கடையில் நின்றவர்கள், ஏன் மேசன் தொழில்புரிந்தவர்களைக் கூட இந்த நியமனத்தில் ஆசிரியர் என்கின்றனர்.

இதன்காரணமாகவேஇன்றும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் கல்வி நிலையில் கடைசி இடங்களைப் பிடித்துள்ளன. இதன் சாபக்கேடு எந்தக்காலத்திலும்மீளமுடியாது. இதனை செய்தவர்கள் இந்தப் பழியை சுமந்தேதீரவேண்டும்-என்றார். (த-105)

# பன்னாட்டு யோகா தினம்



யாழ்ப்பாணம், ஜூன் 22

பன்னாட்டு யோகா தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்திய துணைத்தூதரகமும், வடக்குமாகாணகல்வி அமைச்சும் இணைந்து பன்னாட்டு யோகா தினத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் நடத்தின

மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தின் தொடர்ச்சியான நிகழ்வாக இந்த பன்னாட்டு யோகா தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டார்.

ஆரம்ப நிகழ்வாக, வேம்படி பாடசாலை நிறுவநருக்கு மலர் மாலை அணிவித்து பின்னர், விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களினால், மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதன்பின்னர், யோகா பயிற்சி ஆசிரியர் சூரிய குமாரால், விருந்தினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான யோக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில்இலங்கைக்கான இந்திய கொன்சியுலர் பால சந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி. கே.சிவஞானம், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி பதில் அதிபர் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-106)

# பாரம்பரிய உணவுத் திருவிழா







*யாழ்ப்பாணம், ஜுன் 22*

**பாரம்பரிய இயற்கை முறையிலான உணவுத் திருவிழா ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.**

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த தினம் மற்றும் பன்னாட்டு யோகா தினம் ஆகியவற்றை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜெட்வின் விருந்தினர் விடுதியில் மதியம் 12 மணியளவில் உணவுத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்றது.

சேதனப்பசளைகள் எதுவும் இடப்படாது இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகளைக் கொண்டு உணவு சமைக்கப்பட்டு உணவுத் திருவிழா இடம்பெற்றது.

இயற்கை முறையிலான மரக்கறி வகைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதன் மூலம் உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவது இந்த திருவிழாவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கற்பகதரு என்று கூறப்படும் பனம் பொருளிலான உணவு உட்பட யாழ்ப்பாணத்தில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிவகைகள் உணவாகச் சமைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் சுடச் சுட தயார்செய்யப்பட்ட நெய்தோசை, பூரி போன்றனவும் பரிமாறப்பட்டன. மூன்று வகைக் கூழ், பாயாசம், தயிர், போன்ற உணவுகளும் பரிமாறப்பட்டிருந்தன. நிகழ்வின் ஆரம்பத்தில் மகாத்மா காந்தியின் ஒளிப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து உணவுத் திருவிழா ஆரம்பமானது.

நிகழ்வில் வடக்கு மாகாண தலைமைச் செயலர் பத்திநாதன், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கற்வியற் கல்லூரியின் முன்னாள், இந்நாள் பேராசிரியர்கள், மத குருமார்கள் மற்றும் வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமாகிய சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர்களான அனந்தி சசிதரன், க. சர்வேஸ்வரன், யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் ஈ.ஆர்னல்ட் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-21)

# கிராமத்து வளங்களைக்கொண்டு வாழ்க்கை முறையை மாற்றலாம்

## வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூன் 22

எமது கிராமத்தில் எம்மைச்சூழ காணப்படும் வளங்களைக் கொண்டு அந்த வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி தொழில் துறைகளை வடிவமைப்பதாக எமது இலக்குகள் காணப்பட வேண்டும். இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக மக்களின் சிபாரிசுகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்கான கூட்டம் சிறுப்பிட்டி ஜனசக்தி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; ஒரு காலகட்டத்தில் அரசியல் தலைமைத்துவமும் அதிகாரிகளும் நினைப்பதை அல்லது வழங்குவதை மக்கள் அபிவிருத்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் இப்போது மக்களுக்கு எவ்விடயம் அபிவிருத்தியாக முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டுமோ அதனை அவர்கள் முன்மொழிந்து பெற்றுக்கொள்வதற்கான சரியான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இதனை நாம் பொருத்தமான அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. எங்களுக்கு பல தேவைகள் காணப்படலாம். அவற்றினை எல்லாம் நாம் அபவிருத்திக்கான அடிப்படைகளாகக் கருதிவிடக்கூடாது. நீங்கள் அரச முதலீட்டின் வாயிலாக ஒரு திட்டத்தை நிறை வேற்றுகின்றீர்கள் என்றால் அதற்குள் முக்கியமாக உங்கள் பகுதியில் காணப்படும் வளங்கள் பயன்பாடுடையதாகின்றதா? சுற்றாடல் பாதுகாக்கப்படுகின்றதா? நீங்கள் முன்மொழிந்த அபிவிருத்திகள் வாயிலாக எதிர்காலத்தில் இந்தக் கிராமத்தில் என்ன முன்னேற்றம் ஏற்படுகின்றது போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். அவ்வாறு நாம் செய்யாவிட்டால் அபிவிருத்தியின் வாயிலாக நாம் பயனடையப்போவதில்லை.

இன்று எம் முன் உள்ள அபிவிருத்திக்கான சவால்களில் கிராமம் தோறும் காணப்படும் வளங்களை நாம் உரியவாறு பயன்படுத்தத் தவறி வருகின்றமை எம்மைப் பாதிக்கின்றது. இருப்பதைக்கொண்டு ஒரு கிராமமாக, ஒருபிரதேசமாக நாம் எவ்வாறு முன்னேறலாம் எனச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அதற்காக சனசமூக நிலையங்களில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துமாறு நான் அரச அலுவலர்களுக்கு அறிவுறுத்துகின்றேன்.

இலங்கையில் கிராம மட்டத்தில் சரியான அரச நிர்வாகக் கட்டமைப்பு தேவைக்கேற்றதாகக் காணப்படுகின்றது. கிராம அலுவலகர், சமுர்த்தி அலுவலகர், அபிவிருத்தி அலுவலகர் இவற்றுக்கு மேலாக தற்போது வட்டாரம் தோறும் பிரதேச சபை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலையில் நாம் சகல சூழ்நிலைகளையும் சரியாகப் பயன்படுத்த வேண்டும்- என்றார். (ஐ)

# கன்னியா வெந்நீருற்றின் மரபுரிமையைப் பாதுகாப்போம்

## சிறப்புக் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம்,ஜூன் 22

"கன்னியா வெந்நீருற்றின் மரபுரிமையைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

திருகோணமலை தென்கையிலை ஆதீன சுவாமி அகத்தியர் அடிகளார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமசாரிய சுவாமிகள், அருட்பணி ரவிச்சந்திரன், ஸ்வாமி சிதாகாசானந்தா சின்மயா மிஷன் சுவாமி ஆகியோரை ஆசியுரை வழங்கவுள்ளனர்.

கருத்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் எஸ்.கீருஸ்ணராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரச அறிவியற்துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் திருமலை நவம், சமூக ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஐ)

# போலி முகநூலுக்கு எதிராக நகரசபை உறுப்பினர் முறைப்பாடு

வவுனியா, ஜூன் 22

போலி முகநூலுக்கு எதிராக வவுனியா நகரசபை உறுப்பினர் லரீப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின் திட்டமிட்ட வகையில் இனங்களுக்கிடையில் இனவாதத்தைத் தூண்டி இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படும் போலி முகநூலுக்கு எதிராகவே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் இஸ்லாமியர்களின் பெருநாள் தினத்தன்று தமிழ் சகோதரர்கள் இஸ்லாமியரின் இல்லங்களுக்குச் சென்று பெருநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டதனை ஜீரணிக்க முடியாத சில இனவாத சக்திகள் வவுனியாவில் இனவாதத்தையும், மதவாதத்தையும் போலிப் பரப்புரை ஊடாக மக்களைப் பிழையாக வழிநடத்தி ஒற்றுமையாகவும் சகோதரத்துடனும், வாழும் தமிழ் முஸ்லிம் உறவைப் பிரித்து தங்களது குறுகிய இலக்கை அடைய முனைகின்றனர்.

இவர்களைச் சட்டத்தின் ஊடாக அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும்.

ஒற்றுமையாக வாழும் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்படும் நோக்கில் வன்னி பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபரை முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# தொழில் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

சமுத்திர பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டில் தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளனர். வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, ஆழ்கடல் சுழியோடி, நீச்சல், கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

படகை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமி பயிற்சிநெறியானது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பயிற்சிநெறிகளுக்கு க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் இந்தக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்பவர்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகைமை சான்றிதல் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கற்கைநெறிகளும் கட்டணமின்றி நடத்தப்படுவதுடன் இந்தக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று ஜூலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக் குமாறு இலங்கை சமுத்திர பல்கலைக் கழக யாழ்ப்பாண பிராந்திய உதவிப்பணிப்பாளர் எஸ்.எஸ்.கிருஸ்ணலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

வடமராட்சி,ஜூன் 22

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுப் பாடசாலை முதன்மைக் கலையரங்கில் அதிபர் சி.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது. (ஐ-70)



# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் சிறி காமாட்சி சனசமூக நிலையத்தின் 35ஆவது சைவ சமய அறிவுப் போட்டி , விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலைய முன்றலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் கோ.சத்தியன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை. சோ.சேனாதிராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# சிறுபிள்ளைத்தனமாகவே சிறிசேன செயற்படுகிறார்

## அடைக்கலநாதன் எம்.பி. கருத்து

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் அரசதலைவர் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டிருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் அரசதலைவர் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டிருக்கிறார். நாடாளுமன்றம் முடக்கப்பட்டாலும் கூட நாடாளுமன்ற தெரிவுக் குழுவைக் கலைக்க முடியாது. நாடாளுமன்றம் தான் மக்களின் சக்தியாக இருக்கின்ற சட்டங்களைஇயற்றுகின்ற,நீதித்துறைக்கு வலுச்சேர்க்கின்ற அமைப்பாக இருந்து கொண்டிருக்கின்றது.
தெரிவுக் குழுவைக் கலைப்பதற்கு அரசதலைவரால் முடியாது. தன்னைப் பற்றிய செய்திகள் வெளியில் வரக் கூடாது என்றுதான் அரசதலைவர் கருதுகிறார் என்பது தெரிகிறது.
தெரிவுக்குழுவை நிறுத்த வேண்டும் என்று அமைச்சரவைக் கூட்டத்தை முடக்கியுள்ளார். சட்ட ரீதியாகக்கூட தெரிவுக் குழுவை நிறுத்த முடியாது. ஆகவே அரசதலைவர் தன்னுடைய அதிகாரம் என்ன என்பதை புரியாது செயற்படுகின்றார்.
யார் பிழை செய்தாலும் பிழை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பவர் அரசதலைவர். பாதுகாப்புக் குழுக் கூட்டம் கூட்டப்படுகின்ற போது தலைமை அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபரை அழைக்கக் கூடாது என அவர் கூறியிருந்தார் என்று தெரிவுக் புழு முன் சாட்சியமளித்தவர்கள் கூறியுள்ளார்கள்.
நியாயமான கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றபோது அதனை ஏற்க வேண்டும் - என்றார். (த)



# ஆசிரியர் பற்றாக்குறை விரைவில் தீர்க்கப்படும்

## ஆளுநர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 22
வவுனியாவில் ஆசிரியர் பற்றாக்குறை விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.
வவுனியா செக்கடிப்புலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத்தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.
ஒரு பாடசாலை மாணவியோ, மாணவனோ இந்த நாட்டிலோ உலகத்தில் முக்கியத்துவம் ஒருவராக மாற வேண்டும் என்பதுதான் எங்களின் கடமை. அந்த கடமையை நீங்கள் தான் நிறைவேற்ற வேண்டும்.
இந்தப் பாடசாலைக்கு வந்தபோது பெற்றோர் உதவி செய்கின்றனர் என்று கேள்விப்பட்டேன். அது நல்ல விடயம். பெற்றோரும் ஆசிரியரும் சேர்ந்தால் தான் மாணவர் சமூகம் வளரும், நலம் பெறும். பாடசாலைக்குச் சுற்று வேலி அமைத்து காலையில் மாடுகள் வராமல் பார்த்த ஆசிரியர்களுக்கு நன்றி.
இந்தப் பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர்கள் இல்லை என்று கேள்விப்பட்டேன். இந்த வாரத்தில் சிங்கள ஆசிரியரை நியமிக்க முயற்சி செய்கின்றேன்.
நாங்கள் இரண்டு மொழியையும் படிக்க வேண்டும். ஒருபுறம் சிங்களமும் மறுபுறம் தமிழும் என்று இரண்டு நாகரிகங்களைக் கொண்ட மாவட்டம் இது. ஆகையால் இரண்டு நாகரிகங்களையும் பொருத்தி இரண்டு மொழியையும் அறிந்து முழுமையான குடிமகனாவதற்கு வாய்ப்பையும் சக்தியையும் இறைவன் எங்களுக்கு கொடுக்கட்டும் - என்றார். (த)

# பொரளையில் தீ விபத்து

கொழும்பு, ஜூன் 22
பொரளை, காதர்னானவத்தை பிரதேசத்தில் நேற்று திடீர் தீ விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது.
அதிகாலை 2.30 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் 14ஆவது பிரிவில் உள்ள 4 தற்காலிக வீடுகள் சேதமடைந்தன. பொலிஸார், பிரதேசவாசிகள் மற்றும் கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். உயிரிழப்போ அல்லது காயங்களோ இந்த இடரால் பதிவாகவில்லை. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



# மன்னார் பேருந்து டிப்போ பிராந்திய டிப்போவாகிறது

மன்னார், ஜூன் 22
மன்னார் அரச பேருந்து டிப்போ, பிராந்திய டிப்போவாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத் தீர்மானத்துக்கு அமைவாக மாதிரி டிப்போவாக மாற்றியமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்று டிப்போவினர் அதிகாரிகள் தெரிவித்தனர்.
அதன் முதல் நிகழ்வாக ஊழியர்களுக்கு உற்பத்தித்திறன் மற்றும் நேரான சிந்தனை தொடர்பான
கருத்தரங்கு மாவட்ட உற்பத்தித்திறன் அலுவலர் இ. றொபின் ஜெயரூபன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இந்தக் கருத்தரங்கில் அலுவலகத்தை எவ்வாறு ஆரோக்கியமாக பேணிக்கொள்வது, குழுவாக இணைந்து அலுவலக வினைத்திறனை அதிகரிப்பது போன்ற தலைப்புக்களில் விளக்கம் அளிக்கப்ப ட்டது. (த-213)

# வெலிகமவில் குழுமோதல் புத்தர் சிலைக்குச் சேதம்!

கொழும்பு, ஜூன் 22
வெலிகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற குழுமோதலொன்றில் அந்த இடத்தில் இருந்த புத்தர் சிலை சேதமாக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறை முதன்மை வீதியின் வெலிகம ரெஸ்ட் ஹவுஸ் சந்திக்கு அருகாமையிலுள்ள புத்தர் சிலையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளது..
குறித்த இடத்தின் உரிமை தொடர்பில் பல தரப்பினருக்கிடையில் நீண்டகாலமாக கருத்து முரண்பாடு இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)



# எதிர்நோக்கும் பிரச்சினைகள் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 22
மன்னார் மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் மன்னார் ஆகஸ் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில்,சமூக அமைப்புக்களின் பிரதி நிதிகள், தன்னார்வ தொண்டு அமைப்புக்களின் பிரதி நிதிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.
மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குநர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.
குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகளை மீட்டல், விடுவிக்கப்பட்ட காணிகளில் குடியேறிய மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், மக்களின் நில மீட்புப் போராட்டங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய உதவித்திட்டங்கள் உட்பட மன்னார் மாவட்டத்தில் மக்கள் எதிர் கொள்ளும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (த-56)

# மத நல்லிணக்கத்தை நோக்கிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

வவுனியா, ஜூன் 22
மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வுப் பேரணி வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் நடைபெற்றன.



**வவுனியா**
தேசிய சமாதான பேரவை மற்றும் கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் வவுனியா சர்வமதக்குழுவின் அனுசரணையுடன் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.
கருத்தரங்கின் பின்னர் இரண்டாம் குறுக்குத்தெரு வீதியூடாக பழைய பேருந்து நிலையம் வரை சுவரொட்டிகளைக் கையில் ஏந்தியவாறு பேரணியாகச் சென்றனர். பின்னர் பழைய பேருந்து நிலையத்துக்கு விழிப்புணர்வுச் சுவரொட்டிகளைச் சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஒட்டினார்கள்.
தேசிய சமாதான பேரவையின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் யு.எம் உவைஸ் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயற்றிடத்தில் சமூக பொலிஸ் பிரிவு பொலிஸ் பரிசோதகர் சி.எம்.அரவீந்த, பொலிஸார், கிராம அலுவலர்கள், தனியார் மற்றும் அரச திணைக்களங்களின் அலுவலர்கள், ஊழியர்கள், இளைஞர்கள், மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பலரும் பங்கு பற்றியிருந்தனர்.

**மன்னார்**
மன்னார் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பள்ளி வாசல்கள், பௌத்த விகாரை மற்றும் இந்து கோவில்களுக்கான நல்லிணக்க தரிசிப்பு நேற்றுமுன்தின் நடைபெற்றது.
மத ரீதியில் நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்கும் வகையிலும் முஸ்லிம் மக்களின் மத்தியில் நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரனையில் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஒழுங்கமைப்பில் இது நடைபெற்றது. மன்னார் மாவட்ட சர்வ மத ஒன்றியத்தின் தலைவர்கள், பிரதிநிதிகள், அருட்தந்தையர்கள், மௌலவிகள், விகாராதிபதிகள் உட்பட மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.
மத ரீதியான கல்வியை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 'மதரசா' மற்றும் 'இந்து அறநெறி' பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (த-56)

# பாடசாலை மாணவருக்கு ஈருருளிகள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 10க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஈருருளிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் 'கல்விக்குக் கரம் கொடுப்போம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக இவை கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.
நிகழ்வில் பிரதான அனுசரணை வழங்கிய ஒஸ்லோ இந்து இளைஞர் அமைப்பினர் மூலமாக இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜாவும் ஏனைய விருந்தினர்களாக கோட்டக்கல்வி அதிகாரி சி.சுப்ரமணியேஸ்வரன், உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வே.மாதவமேஜர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (த)



# பழைய பேருந்து நிலையத்துக்கு உள்ளூர் பேருந்துகள் இனிவரும்

## ஆளுநருடனான சந்திப்பில் பணிப்பு

வவுனியா, ஜூன் 22

வவுனியா மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் வந்து செல்லும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இது பற்றி வவுனியா கண்டி வீதியிலுள்ள விகாரையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் கண்டிப்பாகப் பின்பற்றப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். கலந்துரையாடலில் வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், இலங்கை போக்குவரத்துச் சபையினர், பிரதேச செயலர், நகரசபைத்தலைவர், பிரதேச சபைத்தலைவர், நகரசபை உறுப்பினர்கள், பொலிஸார், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களாகப் பழைய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்வதில் இழுபறி நிலை காணப்பட்டது.

பயணிகள் அந்தப் பகுதிக்கு வராததால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள வியாபார நிலைய நடத்துநர்கள் வருமான மிழப்பைப் பெருமளவில் சந்தித்திருந்தனர். (த)

# அனுமதி இன்றி ஆழ்துளைக் கிணறுகள் அமைத்த இருவருக்கு ரூ. 15,000 தண்டம்

பளை, ஜூன் 22



அனுமதி பெறாமல் இயந்திரம் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்த இரு காணிச் சொந்தக்காரர்களுக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பளை பிரதேச சபை மற்றும் மாவட்ட நீர் வழங்கல் அதிகார சபை ஆகியவற்றின் அனுமதியைப் பெறாமல் ஆழ்துளைக் கிணறு அமைத்தனர் என்று பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரு காணி உரிமையாளருக்குத்தண்டம்விதிக்கப்பட்டது. இவ்வாறு பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

"பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயந்திரம் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு சபை அமர்வில் முழுமையாகத் தடை விதிக்கப்பட்டது.

இதனை மீறி ஆழ்துளைக் கிணறுகள் அமைத்த இருவருக்கே தண்டம் விதிக்கப்பட்டது.

மணல்பாங்கான பளைப் பிரதேசத்தில் இயந்திரத்தால் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதால் பெறப்படும் தண்ணீர் குறித்த காலத்தின் பின்னர் உவர்த் தன்மையடைந்து வருவதுடன் ஏனைய கிணறுகளில் தண்ணீரின் அளவும் குறைந்து வரும்.

இதனைக் கருத்தில் கொண்டு சபை அமர்வில் இயந்திரத்தின் மூலம் ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கத் தடை விதிக்கப் பட்டதுடன் மீறி அமைப்போருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை கையால் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவுள்ளோர் சபையுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதி பெற்று அமைக்கலாம்.

கையினால் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் போது குறிப்பிட்ட அளவு தூரத்தில் சுமார் 60 அடி தூரத்துடன் நல்ல தண்ணீர் காணப்படுவதால் நிறுத்தி விடுகிறார்கள்.

இயந்திரத்தினால் அமைக்கும்போது நிலத்தில் காணப்படும் கற்படைகளை உடைத்து அமைக்கப்படுவதால் நீரின் தன்மை மாறுவதுடன் அயலில் உள்ள கிணறுகளிலும் நீரின் அளவு குறைந்து வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து இயந்திரத்தினால் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க தடை விதிக்கப்பட்டது" என அவர் தெரிவித்தார். (ஐ-9)

### வீரமாகாளி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வரலாற்றுச் சிறப்பு மிக்க வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 நாள்கள் திருவிழா நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### குளங்களை நோக்கி படையெடுக்கும் கொக்குகள்

வவுனியா, ஜூன் 22

வவுனியாவில் கடும் வறட்சியான காலநிலை நீடிப்பதால் குளங்கள் மற்றும் நீர் நிலைகளின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதன் காரணமாகக் குளங்களில் மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குகின்றன.

அவற்றை உணவாகப் பெற்றுக் கொள்வதற்காகக் கொக்குகள் இரை தேடி குளங்களை நோக்கிப் படையெடுத்து வருகின்றன.

### பெருந்திருவிழா

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி முரசுமோட்டை சேற்றுக்கண்டி அருள்மிகு சிறி முத்துமாரி அம்பாள் திருக்கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-222)

# வீட்டுக்கு அத்திபாரமிட்ட 7 பேர் கைதாகிப் பிணை

வவுனியா, ஜூன் 22

வவுனியா வடக்கு, கரப்புக்குத்திப் பகுதியில் வன இலாகாவினர் எல்லையிட்ட பகுதியில் வீடு கட்டும் பணியில் ஈடுபட்டனர் என்ற குற்றஞ்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பிணையில் விடுவித்த நீதிமன்று வழக்கை 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வன இலாகாவினரும், சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து நேற்று முன்தினம் 7 பேரையும் கைது செய்தனர்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கரப்புக்குத்திப் பகுதியில் வவுனியா வடக்குப்பிரதேச செயலகம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை என்பன இணைந்து மக்களுக்குக் காணிகளை வழங்கி வீட்டுத் திட்ட நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது வன இலாகாவின் எல்லையிடப்பட்ட பகுதியில் மூன்று வீடுகளை அமைப்பதற்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டப் பயனாளிகள் அத்திபாரம் போட்டுக்கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து மண்வெட்டி உள்ளிட்ட உபகரணங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தியபோதே பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த காணி தொடர்பில் வன இலாகாவினர் கடந்த மாதமும் இருவரைக் கைது செய்திருந்தனர். (த)



# ரூ. 60,000 பெறுமதியான புத்தகங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவில் உள்ள இரு பாடசாலைகள் மற்றும் ஒரு நூலகத்துக்குப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

வாசிப்புப் பழக்கத்தை உயர்த்தவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் ஒருடைய நிதிப்பங்களிப்பிலிருந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் மதிப்புறு துரைராசா ரவிகரன் ஊடாக, இந்தப் புத்தகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசசபை உப அலுவலக நூலகம், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி, தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை என்பவற்றுக்கே இவ்வாறு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

இந்தப் புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வுகளில், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனும் கலந்துகொண்டார். (ஐ-222)

# வவுனியா சந்தை முன் பயிர்ச் சிகிச்சை முகாம்

வவுனியா, ஜூன் 22

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் சந்தைக்கு முன்பாக நேற்று அதிகாலை 5மணி தொடக்கம் காலை 7 மணி வரை பயிர்ச் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமைகளில் விவசாயிகளுக்கு இலகுவான முறையில் சேவை வழங்கும் நோக்கில் வவுனியா பொதுச்சந்தைக்கு முன்பாக பயிர்ச்செய்கை முகாம் நடைபெற்றுவருகிறது.

அதன்படி நேற்றும் நடைபெற்றது. விவசாயிகள் தங்களின் சந்தேகங்கள் மற்றும் பயிர்களுக்கான தீர்வைப் பயிர்ச்சிகிச்சை முகாமில் பெற்றுப் பயனடைந்தனர். (த)



### வேந்தனார் நூற்றாண்டுவிழா நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஈழத்தின் புகழ்பூத்த தமிழாசான் வித்துவான் வேந்தனார் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது நூல்களின் வெளியீடு பாரிஸ் மாநகரில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் 'கலாபூஷணம்' வி. ரி. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் வேந்தனாரின் 'குழந்தை மொழி' (மூன்று பாகங்கள்), வேந்தனார் கட்டுரைகள், 'செந்தமிழ் வேந்தன்' நூற்றாண்டு விழா மலர் (548 பக்கங்கள்) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையினர் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# தமிழர், முஸ்லிம் மக்கள் இணைந்துதான் அரசியல் விடயங்களை அணுக வேண்டும்

## கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 22

*மத ரீதியான வேறுபாடுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நுழைந்து குளப்புவதற்கு இடம்கொடுக்கக்கூடாது கிழக்காக இருந்தாலும் சரி வடக்காக இருந்தாலும் சரி முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் இணைந்துதான் அரசியல் ரீதியான விடயங்களை அணுக வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.*

இவ்வாறுமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்து மாறுகோரி இடம்பெறும் போராட்டத்துக்கு ஆதரவாக வவுனியா கந்தசாமி கோவிலில் நேற்றுத் தேங்காய் உடைத்து வழிபாடுகள் நடைபெற்றன. அதில் உரையாற்றுகையில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

பௌத்த தேரர்களுக்காகவோ பௌத்த தேசியவாதத்துக்காகவோ நாங்கள் எங்களுடைய ஒற்றுமை விடயங்களில் மிகக் கவனமாக நடந்துகொள்ளவேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது.

வவுனியா மக்கள் சார்பாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளான நாம் அனைவரும் ஒன்றிணைந்து இன்று போராட்டம் நடத்தியிருக்கின்றோம்.

பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்துவது அரசியல் சார்ந்த வியடமாக இருக்கிறபடியால் அரசியல் ரீதியாகவும் இதை அணுகவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அதற்கு இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால்முஸ்லிம்காங்கிரஸ் தரப்பிலோ தலைவரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ நேரடியாக இது சம்பந்தமாக எவ்விதமான கருத்தையும் கூறவில்லை. மூடிய அறைக்குள் தான் இந்தப்பேச்சுநடத்தப்பட்டதாக நாங்கள் அறிகின்றோம்.

**நிபந்தனையளவில் கூட மு.கா. ஏற்கவில்லை!**

ஆனால் முஸ்லிம் தரப்பினர் பகிரங்கமாக இதைத் தாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் என்றும் தரமுயர்த்துக்கின்ற விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் அல்லது முஸ்லிம் பிரதிநிதிகள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்றும் கூறுகின்றனர். நிபந்தனையில் அடிப்படையிலாவது ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்ற ஒரு கருத்தைக்கூட இதுவரையில் தெரிவிக்கவில்லை.

ஆனால் ஊடகங்களில் தான் இந்தக் கருத்தைப் பார்க்க முடிகிறது.

தொடர்புபட்ட அமைச்சர் கூடசில நிபந்தனைகளோடு அந்த எல்லைவரம்பு மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப்படும் ஆராயப்படவேண்டும் என்ற ஒரு கருத்தைக் கூயிருக்கின்றாரே தவிர இதற்கு நிரந்தரமான ஒரு முடிவாக ஒரு இணக்கம் தெரிவித்தாக எந்தச் செய்திகளும் இல்லை. இந்தக்கோரிக்கைக்கு அந்த மக்களும் சரி நாங்கள் சரி தொடர்ந்து போராடிக்கொண்டிருக்க வேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது. நிரந்தரமாக பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படும் வரைக்கும் நாங்கள் போராடவேண்டிய கடமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம் - என்றார். (கு)

# மணல் ஏற்றிச் சென்ற சாரதி மீது தாக்குதல்

## *சந்தேகத்தில் இருவர் கைது*

கொடிகாமம்,ஜூன் 22

மணல் ஏற்றிச் சென்ற சாரதியை ஆறு பேர் கொண்ட கும்பல் ஒன்று தாக்கியதில் சாரதி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றது.

காயமடைந்த சாரதி பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் இருவரை கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சாரதி அனுமதிப் பத்திரத்துடன் மணல் ஏற்றிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)



# சிறுபோக விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

முல்லைத்தீவு, ஜூன் 22

முத்துஐயன்கட்டுக் குளத்தின்கீழ் சிறுபோகச் செய்கையின் போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களுக்கான தேவைகள் தண்ணீர் விநியோகம் என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன இலாகா மண்டபத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் இது நடைபெற்றது

இதில் முதலாம் 2ஆம்ஈ 3ஆம், 4ஆம், 5ஆம், கண்ட விவசாயப் பிரதிநிதிகள் மற்றும் பேராறு, கற்சிலைமடு இடதுகரை, மன்னாகண்டல் விவசாயப் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறை என்பன பற்றி பொறியியலாளரிடம் தெரிவித்தனர். அவற்றுக்குத் தீர்வுகள் எட்டப்படும் என்று நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி அலுவலர்கள், கமநலச்சேவை அதிகாரி, விவசாயப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (து-500)

# ஒட்டுசுட்டான் பெருந்திருவிழா

முல்லைத்தீவு,ஜூன் 22

முல்லைத்தீவு அருள்மிகு ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா இடம்பெறும் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி செவ்வாய் கிழமை தீத்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய முகாமைத்துவ சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-222)

# கல்விக்கான நடைபயணம்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

கல்விக்கான நடைபயணம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நடையும் பாராட்டு விழாவும் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வளாகத்தில் காலை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும்,ஏ.எல் 92 குழுவினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஒன்றுகூடி,காலை 8.15 மணிக்கு விழிப்புணர்வு நடையும்,8.30 மணிக்கு கல்விக்கான ஓட்டம் நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மைப் பங்குதாரர்களுக்கான பாராட்டு நிகழ்வும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# காணி உறுதிப்பத்திர நடமாடும் சேவை

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் காணி உறுதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நடமாடும் சேவை கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா, பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பண்டாரிக்குளம், உக்கிளாங்குளம் ஆகிய பகுதிகளில் காணி உறுதிப் பத்திரமின்றி வசித்து வந்த 57 பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்காகவே இந்தக் காணி நடமாடும் சேவை நடைபெற்றது.

இதில் உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.பிரியதர்சினி, கிராம அலுவலர், காணி அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கான காணி உறுதிகள் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து)



# குறுக்கே ஓடிய மாடுடன் மோதி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

மாடு குறுக்கே ஓடியதால் உந்துருளியில் பயணித்த ஒருவர்மாடுடன் மோதுண்டு விபத்துக்குள் ளானார்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை வீதியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில் கடந்த புதன் கிழமை மாலை இடம்பெற்றது.

உந்துருளி சாரதிக்கு காயங்கள் ஏற்பட்டதுடன் உந்துருளியும் சேதமடைந்தது. குறுக்கே வந்த மாடும் காயப்பட்டது. (ஐ-17)

# தேசிய விளையாட்டு நிகழ்வு

வடமராட்சி,ஜூன் 22

வடமராட்சிக்கிழக்கின் இளைஞர் சம்மேளனத்தின் தேசியவிளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொற்பதி சென் பிற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சிக்கிழக்கு தேசிய இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் உ.நிதர்சன் தலைமையில் விளையாட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேசசெயலர் கனகேஸ்வரன் மற்றும் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ப.கிருபைராசா, பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் சா. அரியகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-70)

# இலவச வழிகாட்டல் வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் இன்று நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்து கொள்ளுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலர் ச.தயாபரன் அறிவித்துள்ளார். (ஐ)

# யோக வாழ்வு சஞ்சிகை வெளியீடு

மட்டக்களப்பு,ஜூன் 22

பன்னாட்டு யோகா தினத்தை முன்னிட்டு யோக வாழ்வு சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பு தாழங்குமா சிறி விநாயகர் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. கதிரவன் கலைக்கழகத்தின் தலைவர் த.இன்பராசாவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு வலய வலயக் கல்விப் பணிப்பாளர் வே.மயில்வாகனம் கலந்து கொண்டார். (ஐ-46)



# சட்டவிரோத வீதி அகற்றப்பட்டது

வவுனியா, ஜூன் 22

வவுனியா தர்மலிங்கம் வீதிக்கு அருகே காணப்பட்ட சட்டவிரோத நடைபாதையை வவுனியா நகரசபையினர் நேற்று அகற்றினர்.

வவுனியா தர்மலிங்கம் வீதிக்கு அருகே காணப்படும் வர்த்தக நிலையத்துக்கு முன்பாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியா நகரசபையின் அனுமதியின்றி கொங்கிறீட் மூலம் அமைக்கப்பட்ட நடைபாதையே அகற்றப்பட்டது.

வவுனியா நகரசபைக்கு ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற சபையினர் அதனை அவதானித்து சட்டவிரோதம் என்றுகூறி அகற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (து)



# இந்தியா, இலங்கைக்குத் தொடர்ந்து ஐ.எஸ். அமைப்பால் அச்சுறுத்தல்கள்

## றோ எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 22

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளது என்று இந்திய உளவுப் பிரிவான றோ எச்சரிக்கை விடுத்துள்ளது. றோ இதுகுறித்த மூன்று எச்சரிக்கை கடிதங்களை இந்திய உயர்மட்ட பாதுகாப்பு தரப்புகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளை மையப்படுத்தி இஸ்லாமிய தேசத்தை அறிவித்துச் செயற்பட்டு வந்த ஐ.எஸ் தீவிரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பிரதேசங்கள் முற்றாக இல்லாது போயுள்ள நிலையில் அந்த அமைப்பு இந்து சமுத்திர நாடுகளை நோக்கி நகர்ந்துள்ளதாக இந்திய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்தியாவின் கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களின் பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுக்கு றோ உளவுத்துறை அனுப்பி வைத்திருக்கும் எச்சரிக்கைக் கடிதங்களில் இந்தியாவில் தாக்குதல்கள் மேற்கொள்ளக்கூடிய இடங்கள் தொடர்பான தகவல்களையும் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

கேளராவிலிருந்து சுமார் 100 பேர் வரை ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் கடந்த குறுகிய காலப்பகுதிக்குள் இணைந்திருப்பதாகவும், 30க்கும் அதிகமானநபர்கள் வெவ்வேறு அமைப்புக்களுடன் கேரளா பகுதியில் தொடர்பு வைத்திருப்பதாகவும் றோ கூறியுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் கடல் எல்லைப் பகுதிகளிலும், அதேபோல பல இடங்களிலும் தற்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு ள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இதேவேளை இந்த எச்சரிக்கை குறித்து இலங்கையின் தேசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரிடம் வினவியபோது, றோ உளவுப் பிரிவின் இந்த எச்சரிக்கை குறித்து தங்களுக்கு இதுவரை தெரியப்படுத்தவில்லை என்று பதிலளித்தார்.

எவ்வாறாயினும் இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல்களுக்குப் பின்னர் பாதுகாப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவந்த சுற்றிவளைப்புக்கள், சோதனைகள், கைதுகள் உள்ளிட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன.

இதுவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட முஸ்லிம்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் தொடர்ந்தும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை மேலும் பலர் உள்ளூர் பொலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியல்களிலும் வைக்கப்பட்டுள்ளனர். (ம)



## இலங்கை நாடாளுமன்றத்துக்கு சீனாவால் பாதுகாப்பு கருவிகள்

கொழும்பு, ஜூன் 22

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 33 மில்லியன் ரூபா பெறுமதியான பாதுகாப்புக் கருவிகளை சீன அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது.

மூன்று நடமாடும் எக்ஸ்ரே இயந்திரங்கள், மற்றும் உலோகப் பொருள்களைக் கண்டறியும் ஐந்து கருவிகள் அடங்கிய இந்த பாதுகாப்புக் கருவிகளை சீன தூதுவர் செங் ஷியுவான், நேற்றுமுன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், விருந்தினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இந்தப் பாதுகாப்புக் கருவிகளை, சீனா அவசர அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு வழங்கியுள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேன, அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, சீன அதிபர் ஷி ஜின்பிங் இலங்கைக்கு, அவசர நிதியுதவியாக 2.6 பில்லியன் ரூபாவை வழங்கியிருந்ததுடன், இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, தொழில்நுட்ப பயிற்சிகள், பாதுகாப்புக் கருவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார்.

இதையடுத்து பல்வேறு உதவிகளை சீனா இலங்கைக்கு வழங்கி வருகிறது. இதன்ஒருகட்டமாகவேமேற்படி பாதுகாப்புக் கருவிகளும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

சீனா எப்போதுமே இலங்கையை, நல்ல அயலவராக, நல்ல நட்பு பங்காளராக, நல்ல நண்பனாக, நல்ல சகோதரரராகவே கருதுகிறது. சீனாவினால் இலங்கைக்கு அளிக்கப்படும், அனைத்து உதவிகளும் எந்த கோர்வைகளாலும் இணைக்கப்படவில்லை. இது சீன மக்களின் நலலெண்ணத்தையே பிரதிபலிக்கிறது' சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஒலிம்பிக் தினத்தை முன்னிட்டு நடைபவனி



கொழும்பு, ஜூன் 22

எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறும் ஒலிம்பிக் தினத்தை முன்னிட்டு இலங்கை தேசிய ஹொக்கிச் சங்கம் நடைபவணி ஒன்றை எற்பாடு செய்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஹொக்கி விளையாட்டை பிரபல்யப்படுத்தி ஹொக்கி விளையாட்டில் பன்னாட்டு மட்டத்தில் இலங்கையின் வீரர்களை மேம்படுத்து வதே இதன் நோக்கமாகும் என்று இலங்கை ஹொக்கி சங்கத்தின் செயலாளரும் தேசிய ஒலிம்பிக் குழுவின் உப தலைவருமான சுமித் எதிரிசிங்க தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இவர் உரையாற்றினார். இன்று காலை 8 மணிக்கு பண்டாரநாயக்கபன் னாட்டு ஞாபகார்த்த மகா நாட்டு மண்டபத்துக்கு அருகியில் இந்த நடைபவணி ஆரம்பமாகவுள்ளது. சுதந்திரசதுக்கத்தின் ஊடாக எஸ்ட்ரோ டார்வ் வரையில் இந்த நடை பவனி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதானோரின் விசாரணையை துரிதப்படுத்துமாறு உத்தரவு!

### மைத்திரி விடுத்தார்

கொழும்பு, ஜூன் 22

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் சிறு குற்றங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தி பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்பற்ற அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புத் துறையினருக்கு அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன பணிப்புரை விடுத்துள் ளார்.

தேசிய பாதுகாப்பு சபை நேற்றுமுன்தினம் மாலை அரச தலைவர் மைத்ரிபால சிறிசேன தலைமையில் கூடியபோதே இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமைக் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டன.

சமய நிகழ்வுகள் மற்றும் பொதுமக்கள் சந்திப்புகள் நடைபெறும் இடங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் அரச தலைவர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட ஆளுங்கட்சி, எதிர்கட்சி ஆகியவற்றின் சிரேஷ்ட மக்கள் பிரதிநிதிகளும் பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி, முப்படை தளபதிகள், புலனாய்வுத் துறை பிரதானிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு துறையின் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம)

## மைத்திரிபால சிறிசேனவின் கம்போடியப் பயணம் ரத்து



கொழும்பு, ஜூன் 22


அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கம்போடியாவுக்கான பயணம் கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கம்போடியா மற்றும் லாவோஸ் நாடுகளுக்கு இந்தமாத இறுதியில் பயணம் மேற்கொள்ளவிருந்தார். எதிர்வரும் 26திகதி தொடக்கம், கம்போடியாவுக்கும் லோவோசுக்கும் பயணம் மேற்கொள்வதற்கு அவர் திட்டமிட்டிருந்தார். எனினும், அவரது இந்தப் பயணத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது, எதிர்வரும் ஓகஸ்ட் மாதமே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஐம்பது அடி பள்ளத்தில் குடைசாய்ந்த பாரஊர்தி

கொழும்பு, ஜூன் 22

டயகம பகுதியில் இருந்து கொழும்புக்கு தேயிலை ஏற்றி சென்ற பார ஊர்தியொன்று கொழும்பு முதன்மை வீதியின் கினிகத்தேன பகுதியில், 50 அடி பள்ளத்தில் நேற்றுமுன்தினம் குடைசாய்ந்தது. இதில் பயணித்த சாரதியும் நடத்துனரும் காயமடைந்த நிலையில் கினிகத்தேன மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.



குறித்த பாரஊர்தியில் 10 தொன் தேயிலைத் தூள் இருந்தது. இதனால் அளவுக்கு அதிகமான சுமையால் ஊர்தி குடைசாய்ந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## பொம்பியோவின் பயணத்துக்கும் சோபாவுக்கும் தொடர்பில்லை!

### அமெரிக்க அதிகாரி தகவல்

கொழும்பு, ஜூன் 22

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் இலங்கைக்கான பயணம் கைவிடப்பட்டமைக்கும் 'சோபா' உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என மூத்த அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வரும் 24ஆம் நாள் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, இலங்கைக்கு எதிர்வரும் 27ஆம் திகதி குறுகிய பயணம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், தவிர்க்க முடியாத திட்டமிடல் முரண்பாடுகளால், அவரால் இலங்கைக்கான பயணத்தை இம்முறை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

அமெரிக்காவுடனான படைகளை நிலைப்படுத்தல் தொடர்பான 'சோபா' உடன்பாட்டுக்கு, இலங்கை எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே, அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் பயணம் கைவிடப்பட்ட அறிவிப்பு வெளியாகியது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர், 'பொம்பியோவின் இந்தப் பயணத்தின் போது, 'சோபா' உடன்பாடு குறித்துப் பேசத் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவரது இலங்கைப் பயணம் கைவிடப்பட்டமைக்கும் 'சோபா' உடன்பாட்டுக்கும் தொடர்பு இல்லை' என்று தெரிவித்துள்ளார். (ம)

# 21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றதான கல்வியைப் பலர் விரும்பவில்லை

## அமைச்சர் அகிலவிராஜ் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 22

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப கல்வித் திறமைகளை பெற்றுக்கொள்வதற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் தொழில்நுட்ப அறிவை உயர்தர மாணவர்களுக்கு வழங்கும் முகமாக டெப் கணினி வழங்கும் திட்டத்திற்கு விமர்சனங்களின் ஊடாக குந்தகம் விளைப்போரை நினைத்து கவலை அடைய வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



இதுதொடர்பில்அவர்அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
உயர்தர மாணவர்களுக்கு டெப் கணினி வழங்கும் திட்டம் குறுகிய நோக்குடன் பார்க்கும் விடயமல்ல. இந்தத் திட்டம் வெறுமனே உபகரணம் வழங்கும் திட்டம் மாத்திரமின்றி அதனையும் மீறி எதிர்காலத்திற்கு ஏற்ற தேசிய செயற்திட்டமாகும்.
இந்தத் திட்டமானது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முழுமைப் படுத்துவதற்கு இலங்கை சிறு வர்களுக்கு கிடைத்த பெரும் வரமாகும்.
எனினும் ஒரு சிலர் இந்த வரத்தை இல்லாமல் செய்வதற்காக வீண் தர்க்கங்களை முன்வைப்பதா னது உலக அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சிறுவர்களுக்கு சமமாக எமது சிறுவர்களும் வளர்ந்து வருவதனை காண்பதற்கு விருப்பம் இன்மையையே எடுத்துகாட்டுகின்றது - என்று குறிப்பிட்டுள்ளது. (ம)

---

# ஆள்கடத்தலை தடுக்க தவறியது இலங்கை

## அமெரிக்கா அறிக்கை

வொஷிங்டன், ஜூன் 22



ஆள்கடத்தல்நடவடிக்கைகளை இலங்கை அரசு தடுக்கத் தவறிவருகிறது என்று அமெரிக்கா தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்ட ப் பட்டுள்ளது.
ஆள்கடத்தல் விடயத்தில் இரண்டாம் அடுக்கு கண்காணிப்பு பட்டியலில் இலங்கை காணப்படுகிறது. ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை. இந்த விவகாரத்தில் மேலதிக செயற்பாடுகளை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று அந்தத் திணைக்களம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

---

# அடுத்த அரச தலைவர் சஜித் பிரேமதாஸதான்

## அத்துகோரள நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 22



நாட்டின் அடுத்த அரச தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸவே நியமிக்கப்படுவாரென நீதியமைச்சர் தலதா அதுகோரலதெரிவித்துள்ளார்.
கடுறோதகம பகுதியில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே தலதா அதுகோரல இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'குடும்ப ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி 'நல்லாட்சி' உருவாக்கப்பட்டது. மேலும், இதற்கு முன்னைய ஆட்சியில் தனியார் நிலங்களில் அத்துமீறிய குடி யேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் பொதுமக்களின் காணிகளும் அபகரிக்கப்பட்டது. இந்த விடயங்களை அனைத்து மக்களும் நன்கு அறிவார்கள். இதேவேளை எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவே நிறுத்தப்படுவார். அவர் வெற்றிபெறுவார். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை' என்றார். (ம)

---

# ஆயுதங்கள், ஹெரோய்னுடன் வத்தளையில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 22
வத்தளை பகுதியில் துப்பாக்கி, தோட்டக்கள் மற்றும் ஹெரோய்னுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.
மாலிகாவத்த பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
இவரிடமிருந்து துப்பாக்கிகள் இரண்டும், 7 தோட்டாக்களும் மற்றும் 7 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்க ப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

---

# தௌஹீத் ஜமாத் பள்ளிகள் கண்டியில் பதிவுபெறவில்லை

## அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22



கண்டிமாவட்டத்தில் தௌஹீத் ஜமாத் அமைப்பின் எந்தப் பள்ளிவாசலும் பதிவு செய்யப்படவில்லை என்று தபால் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.
வக்பு சபையின் ஊடாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பள்ளி வாசல்களை பதிவு செய்வதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்றினம் இடம்பெற்ற விவா தத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் அப்துல் ஹலீம் இதனைத் தெரிவித்துள்ளார்.
கண்டி மாவட்டத்தில் தீவிரவாதம் கிடையாதென விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். சிங்கள, பௌத்த மக்களுக்கு நியாயத்தை வழங்கி ஏனைய மக்களுக்கும் நியாயத்தை நிலை நாட்டுவது ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையாகுமென அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ம)

---

# மரங்களை மிகமிக அதிகமாக நடுங்கள் பசுமையான நாட்டுக்கு அதுதான் தீர்வு!

## இர்ாணுவத் தளபதி இவ்வாறு வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 22
நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களும் வாராந்தம் ஒவ்வொரு மரக்கன்றை நட்டால் எமது நாட்டுக்குத் தேவையான மழை மற்றும் நீர்வளத்துக்கு எந்தத் தட்டுப்பாடும் இருக்காது என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க.
மகாத்மா கந்தியின் 150 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பூண்டுலோயா டன்சினன் தோட்டபகுதியில் உள்ள மகாத்மா கந்திபுரத்தில் மரக்கன்றுகளை நட்ட பின்னர் வைத்து மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வில்பத்துப் பகுதியில் இராணுவத்தினரால் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதேபோல் இலங்கையில் எந்தப் பகுதியில் மரகன்றுகள் நடப்பட்டாலும் இராணுவம் அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் வழங்கும். எமது நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை, மழையின்மை போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க மரங்களை நடுவதே சிறந்த தீர்வு - என்றார். (ம)

---

# சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்ப நிதியமைச்சு பல்வேறு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22
சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த தொழிற்துறைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு பல்வேறு நிவாரண செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
ஈஸ்டர் தாக்குதல் தினத்தன்று இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை அடுத்து நாட்டின் சுற்று லாத்துறை வெகுவாகப் பாதிப்படைந்தது. அந்தத் துறையின் எதிர்காலம் தொடர்பில் ஏற்பட்ட அச்சுறுத்தலைக் கவனத்திற்கொண்டு சுற்றுலாத்து றையை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிவாரணத்தின் அளவை நிதியமைச்சு மேலும் அதிகரிக்கவுள்ளது.
அதேபோன்று சுற்றுலாத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட முதலீட்டுக்கடன் திட்டத்திற்காக எதிர் வரும் 2020ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை நிவாரண காலமொன்றை வழங்குதல், அதற்கான கடன் பாதுகாப்பு நிதியில் உள்ளடக்கப்படுவதை விரிவுபடுத்தல், பஸ் உரிமையாளர்களுக்காக இவ்வாண்டு ஜூன் 30ஆம் திகதி வரையில் இரு மாதங்களுக்கு கடன்களுக்கான நிவாரண காலஅவகாசம் வழங்குதல், இசைக்குழு மற்றும் சுற்றுலாத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், நபர்களுக்காக குழு கடன்திட்ட முறையொன்றை அறிமுகப்படுத்தல், 'சஞ்சாரக பொட்டோ' என்ற கடன்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-61)

---

# துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

கொழும்பு, ஜூன் 22
கம்பஹாவில் உள்ள சோதனைச் சாவடிகளில் நிறுத்த மறுத்த முச்சக்கர வண்டியை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.
இதன்போது முச்சக்கர வண்டி சாரதி காயமடைந்தார் என்றும் பின்னர் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலும் குறித்த முச்சக்கர வண்டியின் சாரதி மதுபோதையில் வாகனத்தை செலுத்தியிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

---

## ஜூலை முதல்

# அரச அலுவலர்களுக்கு சம்பளம் அதிகரிக்கிறது

கொழும்பு, ஜூனஜ 22
அரச ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.
இந்த வருட இறுதிப் பகுதியில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீண்டும் திருத்தியமைப்பதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. 134 புதிய உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கு நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வில் அமைச்சர் கலந்துக்கொண்ட போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். சுங்கத் திணைக்களத்தில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ம)

# புதிய முஸ்லிம் தலைமையை உருவாக்க பெரமுன முயற்சி

## மகிந்த இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22

புதிய முஸ்லிம் தலைமையொன்றை உருவாக்கும் முயற்சியில் சிறீலங்கா பொதுமக்கள் முன்னணி ஈடுபட்டுள்ளது என்று தெரிவித்து'ள்ளார் முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச.

பெல்லன்வில ரஜமஹா விகாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ச இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முஸ்லிம் தலைமையை உருவாக்கும் செயற்பாட்டை எங்களது கட்சி முன்னெடுத்துள்ளது. ஆகையால் தற்போதுள்ள முஸ்லிம் தலைமைகளும் இதில் இணைந்துக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அடுத்தடுத்துத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் கூட்டுத் தொடர்பில் சிறிலங்கா பொது மக்கள் முன்னணி கடந்த சில வாரமாக அதிக அக்கறைகாட்டி வருகின்றது. அந்த வகையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் மகிந்த தரப்பு தொடர்ச்சியாக பேச்சுக்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## மைத்திரிதான் வேட்பாளர் என்கிறார் அமரவீர

கொழும்பு, ஜூன் 22

அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றாலும், வரும் அரச தலைவர் தேர்தலில் அரசதலைவர் மைத்ரிபால சிறிசேனவே, நிச்சயமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாமல் எந்த வேட்பாளரும் வெற்றி பெற முடியாது என்பதால், பொதுமக்கள் முன்னணியும் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவையே தெரிவு செய்யும். மைத்திரிபால சிறிசேனவை சுதந்திரக் கட்சி விரைவில் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கும். 2018 உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற 1.7 மில்லியன் வாக்குகளை யாரும் புறக்கணிக்க முடியாது. இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே, 'கிங் மேக்கராக' இருக்கும் என்பதில் சந்தேகமில்லை' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இன்னும் சில நாள்களுக்கு காற்றுடன்கூடிய காலநிலை

கொழும்பு, ஜூன் 22

நாடு முழுவதும் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய நிலைமையும் நாட்டின்தென்மேற்குப்பகுதியில் தற்போதுகாணப்படும்மழையுடன்கூடியவானிலைநிலைமையும் அடுத்த சில நாள்களுக்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, தென், ஊவா, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரையான அதிகரித்த வேகத்தில் பலத்தகாற்று வீசுவதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 40 50கிலோமீற்றர்வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடமேல் மாகாணத்திலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு, காலி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்து க் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அதேவேளை புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையி லிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்துகொழும்பு மற்றும் காலி ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகவும்காணப்படும்.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இலங்கையை தாக்கியவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளே

### ரஷ்யா அழுத்தம் திருத்தம்

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் தொடர் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டவர்கள் சிரியா ஈராக் ஆகிய நாடுகளில் முன்னர் தீவிரமாக செயற்பாட்டில் ஈடுபட்ட ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் என்று ரஷ்ய பாதுகாப்புச் சபையின் பிரதிச் செயலர் யூரிகொகோவ் தெரிவித்தார்.

ரஷ்யாவின் உவா நகரில் நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பன்னாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது யூரிகொகோவ் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிரியா ஈராக்கில் ஐ.எஸ் அமைப்பிற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டு, இலங்கைதிரும்பிய உள்ளூர் தீவிரவாத குழுவொன்றே குண்டுவெடிப்பு களை திட்டமிட்டது. குறித்த அமைப்பு, வெளிநாடுகளிலுள்ள ஐ.எஸ் கட்டமைப்புகளை அடிப்படையாக கொண்டே தொடர் குண்டுத் தாக்குதலையும் நடத்தியுள்ளது.

இதேவேளை சிரியா ஈராக்கிற்கு வருகை தருமாறு ஏனைய நாடுகளிலுள்ள ஐ.எஸ் பயங்கரவாதிகளை அந்த அமைப்பு அழைத்தது. ஆனால் தற்போது அவர் தங்கியிருக்கும் நாடுகளில் தாக்குதலை நடத்துமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடுகளினால் ஐரோப்பிய நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது' - என்றார். (ம)

## இலங்கையின் பொருளாதார வளர்சி வேகம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 21

இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3.72 சதவீதமாக பதிவாகியுள்ளது.

விவசாயம் கைத்தொழிற்துறை சேவை ஆகியவற்றில் இந்த வளர்ச்சி இடம்பெற்றுள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைக்க முயற்சி!

### கர்தினால் மல்கம் ஆண்டகை உரோமில் வைத்துத் தெரிவிப்பு

வத்திக்கான், ஜூன் 22

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பானஉண்மைகளைமறைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம்சாட்டியுள்ளார். பாப்பரசரைச் சந்திப்பதற்கு சென்றுள்ள அவர், உரோமில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தவேளை இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கணவர் ஒருவர் தனது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் இழந்துள்ளார், நான் அவரை சந்திக்கச் சென்றவேளை தான் வேலையிலிருந்து வீடு திரும்பியவுடன் பிள்ளைகள் ஓடிவருவதை அவர் நினைவு கூர்ந்தார். இன்று அந்த வீடு வெறுமையாக உள்ளது.

இலங்கையில் தாக்குதல்கள் இடம்பெறவுள்ளன என ஏப்ரல் நான்காம் திகதி இந்திய புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர் அதற்கு பின்னர் 3 தடவைகள் அவர்கள் இவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ள னர். எனினும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

உயிர்த்தஞாயிறு தினத்தன்று காலை 6.45 மணிக்கும் குண்டுவெடிப்பு இடம்பெறலாம் என்ற தொலைபேசி எச்சரிக்கை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதனை எவரும் தீவிரமாக எடுக்கவில்லை. உரிய கவனத்துடன் இதை அணுகியிருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கலாம், எனக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்திருந்தால் அனைத்து தேவாலயங்களையும் மூடிவிடுமாறும் மக்களை வீடுகளுக்குச் செல்லுமாறும்கேட்டிருப்பேன்.



ஒவ்வொருவரும் ஏனையவர்கள்மீது குற்றச்சாட்டுகளை சுமத்த முயல்கின்றனர். உண்மையை மறைப்பதற்கான முயற்சிகளும் இடம்பெறுகின்றன. இந்த விடயத்தில் அரசதலைவர்கூட குற்றவாளியா என்ற சந்தேகம் காணப்படுகின்றது - என்றார். (ம)

# சுற்றுலாத்துறை தகவல் நிலையம் யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடக்கு மாகாணத்தின் சுற்றலாத் துறையை விருத்தி செய்யும் நோக்கில் சுற்றுலாத்துறைக்கான தகவல் நிலையம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டதுடன், சுற்றுலாத்துறை தொடர்பான இறுவட்டும் வெளியிடப் பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நிகழ்வில் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட் டார்.

அழிவடைந்துள்ள சுற்றுலாத்துறையை மேலெழச் செய்யும் நோக்குடன் வடக்கு மாகாணத்தில் சுற்றுலா தொடர்பான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாண சுற்றுலாத் துறையின் ஏற்பாட்டில் நேற்றுத் தகவல் நிலையம் திறக்கப்பட்டது. யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தில் அந்த நிலையம் அமைந்துள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் ஆகியோர் இணைந்து தகவல் நிலையத்தைத் திறந்து வைத்தனர். முன்னதாகத் தகவல் நிலையத்துக்கான பெயர் பலகையை வடக்கு மாகாண ஆளுநர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து இறுவட்டு வெளியிடும் நிகழ்வு யாழ்ப்பாணம் வலம்புரி விடுதியில் இடம்பெற்றது. சமயம், வரலாறு, பண்பாடு, இயற்கை போன்ற விடயங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தளங்கள் தொடர்பான காட்சிகள் அந்த இறுவட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறுவட்டை வெளியிட்டு வைத்த வடக்கு மகாண ஆளுநர் அதன் முதற் பிரதியை வடக்கு மாகாண முதன்மை செயலருக்கு வழங்கினார். தொடர்ந்து பிரதிகளை வடக்கில் உள்ள விடுதிகள், மற்றும் விடுதிகளின் உரிமையாளர்கள் பெற்றுக் கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே சிவஞானம், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, உறுப்பினர் சயந்தன், வடக்கு மாகாண தலைமைச் செயலர் பத்திநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் உள்ளிட்ட அதிகாரிகள், சுற்றுலாத் துறை சாந்த உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-21)

## முஸ்லிம்...

கிரஸ் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்டார்.

கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றகீப், கல்முனை முகைதீன் ஜூம்ஆ பெரியபள்ளிவாசல் தலைவர் மருத்துவ கலாநிதி எஸ்.எம்.ஏ. அஸீஸ் உள்ளிட்ட உலமாக்கள், அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பிரதேசங்களையும் சேர்ந்த பொதுமக்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

நேற்றுக் கல்முனைக்கு அரசின் பிரதிநிதியாகச் சென்ற ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பி. தயாகமகே போராட்டக்காரர்களின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (எ)

## வெலிக்கடை...

ஆம் இலக்க குற்றவியல் சட்டத்தின் 450 (4) ஆம் உறுப்புரை மற்றும் நீதிமன்ற கட்டமைப்பு சட்டத்தின் 12(2) ஆம் அத்தியாயத்துக்கு அமைய இந்தக் கோரிக்கையை சட்ட மா அதிபர் தலைமை நீதியரசரிடம் முன்வைத்துள்ளார் என்று சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார். பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மோசஸ் நியோமால் ரங்கஜீவ, மெகசின் சிறைச்சாலையின் அப்போதைய சிறை அத்தியட்சர் லமாஹேவகே எமில் ரஞ்சன், தற்போது தலைமறைவாகியுள்ள சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மிதுவகே இந்திக சம்பத் ஆகியோருக்கு எதிராகவே விசாரணைகளுக்கு மூவர் கொண்ட சிறப்பு நீதிமன்றை அமைக்க வேண்டும் என்று சட்ட மா அதிபர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த படுகொலைகள் தொடர்பாக அன்றிலிருந்து 5 வருடங்கள் உரிய விசாரணைகள் இடம்பெற்றிருக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ள சட்ட மா அதிபர், 2017 ஆம் ஆண்டே சி.ஐ.டி. ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன என்றும் 2018ஆம் ஆண்டின் இறுதிக் காலப் பகுதியில் விசாரணைக் கோவை சட்ட மா அதிபருக்கு பாரப்படுத்தப்பட்டன என்றும் சட்ட மா அதிபரால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (எ)

## நான்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து அரசு தப்பிக்க முயற்சிக்கின்றது. அதனாலேயே எல்லாப் பொறுப்பையும் அதிகாரிகள் மீது திணிப்பதற்கு அரசு திட்டமிடுகின்றது.

இந்தத் தாக்குதல்களால் முஸ்லிம் மக்களே இன்று அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அடிப்படைவாதிகளைப் மறுவாழ்வுக்குட்படுத்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும்.

போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் நிம்மதியாக வாழ்ந்தோம். இன்று நிம்மதி பறிபோயுள்ளது. நாட்டை நேசிக்கும் தலைவரொருவர் அவசியம். இன்னும் 4 மாதங்களில் இந்த அரசின் ஆயுள்காலம் முடிவடைந்து வி டும். எந்தத் தேர்தல் வந்தாலும் நாம் வெற்றி பெறுவது உறுதி. எமது ஆட்சியின் கீழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் - என்றார். (எ-22)

## கோத்தபாய....

அறிவித்தல் வழங்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் உத்தரவிட்டார். 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள் கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாணையின் போது இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று விளக்கத்துக்கு வந்தது. சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி அமரசிங்க முற்பட்டார்.

சாட்சி இன்று மன்றில் முன்னிலையாக முடியவில்லை. அவர் சிங்கப்பூர் மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை பெற்று அங்கு ஓய்வு எடுத்து வருகிறார். அதனால் அவர் இந்த மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்க தவணை ஒன்றை வழங்க வேண்டும் என்று அவரது சட்டத்தரணி மன்றுரைத்தார்.

அதனால் வழக்கு விசாரணையை வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதிவரை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட் டார். (எ-37,106)

## அரசின்...

பட்டினிப் போராட்டம்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச சபையாகத் தரமுயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி தொடர் பட்டினிப் போராட்டம் நடந்தப்பட்டு வருகின்றது. நேற்று இந்தப் போராட்டம் 5 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

இந்து, பௌத்த மதத் தலைவர்கள், பொதுமக்கள், அரசியல் தரப்பினர் எனப் பலர் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். தமது கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த விடயம் தொடர்பாகத் தலைமை அமைச்சருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையே சந்திப்பு ஒன்று நாடாளுமன்றத்தில் உள்ள தலைமை அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தது. உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவும் கலந்து கொண்டார்.

அந்தச் சந்திப்பின் பின்னர் கல்முனை வடக்கைத் தரமுயர்த்துவதற்கான அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தைப் போராட்டத்தில் ஈடுபடுவோரிடம் தெரிவிங்கள் என்று தலைமை அமைச்சர் எம்மிடம் தெரிவித்திருந்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சோ.சேனாதிராசா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

**நேரில் சென்றது குழு**

இந்தப் பிரச்சினை தொடர்பில் எட்டப்பட்ட தீர்வை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் அறிவிப்பதற்காக நேற்று அமைச்சர்களான தயாகமகே, மனோ கணேசன் ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனும் கல்முனைக்குச் சென்றிருந்தனர். அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைச் சென்று சந்தித்துள்ளனர்.

அங்கு மக்கள் முன்னிலையில் அமைச்சர் மனோ கணேசன் உரையாற்றினார். அதன்பின்னர் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலகம் ஏற்கனவே தரமுயர்த்தப்பட்டுள்ளது என்றும், அதற்குக் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் பிரதேச செயலகத்துக்கான முழுமையான அதிகாரத்தை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் வழங்குவதற்குப் பொது நிர்வாக அமைச்சர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என்றும் தெரிவித்ததுடன், அதற்கான வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் அவை தாமதமடைந்துள்ளன என்றும் தெரிவித்தார்.

**மக்கள் கொதிப்பு**

இந்த நிலையில் அங்கிருந்த மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. 3 மாத கால அவகாசம் தொடர்பாகத் தெரிவிக்கப் பட்டதுடன் அது உக்கிரமடைந்தது. இந்தத் தீர்வில் எந்த விடயமும் இல்லை. இது எம்மை ஏமாற்றிக் காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடு. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அங்கிருந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினரை சூழ்ந்து கொண்டதுடன் ஆவேசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர். அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினரை பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்பாக வாகனத்தில் ஏற்றி அப்புறப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அப்போது மக்கள் கையில் கிடைத்தவற்றை எடுத்து எறிந்து தாக்க முயன்றனர் என்று கூறப்படுகின்றது. பாதுகாப்புப் பிரிவினர் பலத்த சிரமத்தின் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினரை வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர். அமைச்சர் தயாகமகே அங்கிருந்தவர்களை அமைதிப்படுத்த முயன்றபோதும் அது கைகூடவில்லை. அமைச்சர்களும் பாதுகாப்புப் பிரிவினரால் அங்கிருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

தீர்வு வழங்கப்படும்வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபடுவோர் தெரிவித்துள்ளனர். அவர்களின் போராட்டம் நேற்றுத் தொடர்ச்சியாக நடைபெற்றது. இந்தச் சம்பவங்களால் நேற்றுக் கல்முனைப் பிரதேசம் பதற்றமாகக் காணப்பட்டது. (எ)

## பதில்...

என்று எவரும் சாட்சியங்களை முன்வைக்கவோ, முறைப்பாடுகள் செய்யவோ இல்லை என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(எ)

## இலங்கைத்...

புதன்கிழமை முதல் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மூன்று வருடங்களாக தாம் திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## கோத்தபாயவே..

அறியமுடிகின்றது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்டக் கூட்டம் நேற்று முற்பகல் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது எனவும் தெரியவருகின்றது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) வருடாந்த சம்மேளனத்தை ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நடத்துவதற்கும் அதற்கான ஏற்பாடுகளை பிரமாண்டமாக செய்வதற்கும் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இந்த மாநாட்டின்போதே கட்சி தலைமைப் பதவியை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கும் யோசனையை தற்போதைய தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் முன்வைப்பார் என்றும், அதைப் பசில் ராஜபக்ச வழிமொழிவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மாநாட்டில் சிறப்புரையாற்றும்போது கூட்டு எதிரணியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை மகிந்த ராஜபக்ச அறிவிப்பாரென்றும், அது பெரும்பாலும் கோத்தபாய ராஜபக்சவாகவே இருக்கும் என்றும் கூட்டு எதிரணி வட்டாரங்கள் கூறுகின்றன.

அரச தலைவர் வேட்பாளரை மகிந்த அறிவித்த பின்னர் மறுநாள் காலை கண்டி தலதாமாளிகைக்கும், முன்னேச்சரம் கோவிலுக்கும் செல்வதற்கு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அதன்பின்னர் மாவட்ட ரீதியில் ஜனாதிபதி வேட்பாளர் அறிமுக நிகழ்வுகளும் இடம்பெறும் என கூட்டு எதிரணி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (எ)

## தொடருந்தில்...

திரும்பியபோதே விபத்து நேர்ந்துள்ளது. கடுகதித் தொடருந்தில் மோதி அவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் சிக்கியதில் பெண்ணின் உடல் மோசமாகச் சிதைவடைந்துள்ளது. பொலிஸார் உடலை மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-ரி1)

# வடகொரியா சென்று திரும்பினார் சீனாவின் அதிபர் ஜி ஜின் பிங்



பீஜிங்,ஜூன் 22
சீன அதிபர் ஜி ஜின்பிங் இரண்டு நாள்கள் சுற்றுப்பயணமாகக்கடந்தவியாழக்கிழமையன்று வடகொரியாவுக்குச் சென்று நாடு திரும்பினார். வடகொரியா சென்றடைந்த ஜி ஜின்பிங்கை வடகொரியாவின் அதிபர் கிம் ஜோங் உன் பியோங்ஜாங்கில் உள்ள வானூர்தி நிலையத்தில் வரவேற்றார். முதல் நாள் சந்திப்பில் பேச்சுக்களில் ஈடுபட்டனர். வடகொரியாவின் அணு ஆயுதச் சோதனைகளால் அதிருப்தியில் இருந்த சீனா, அந்த நாடு மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை ஆதரித்தது.
இதனால் சீனா வடகொரியா உறவில் சுமுகம் இல்லாத நிலையில் கடந்த ஆண்டு சீனாவுக்கு வடகொரியா அதிபர் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.
இது இணக்கத்தை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஜி ஜின்பிங் வடகொரியாவுக்குச் சென்றுள்ளார்.
சீனா அதிபரின் இந்தப் பயணத்தின் மூலம் வடகொரியா என்கிற தனிமைப்படுத்தப்பட்டிருந்த நாட்டுக்குக் கடந்த 14 ஆண்டுகளில் பயணம் செய்த முதல் சீன அதிபர் என்ற பெருமை ஜி ஜின்பிங்குக்குக் கிடைத்துள்ளது.

### அதிகரிக்கிறது பதற்றம்

# அமெரிக்க வானூர்தியை சுட்டு வீழ்த்தியது ஈரான்

## ஈரானைத் தாக்குமாறு ட்ரம்ப் கட்டளை

தெஹ்ரான்,ஜூன் 22
அமெரிக்காவின் ஆளில்லாத உளவு வானூர்தி ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதாக ஈரானின் செய்தி நிறுவனம் ஒன்று நேற்று முன்தினம் தெரிவித்தது. ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் என்ற பிரதேசத்துக்குள் புகுந்தபோதே அமெரிக்காவின் குறித்த ஆளில்லா உளவு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஆனால், இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்த் அமெரிக்கா, தங்களுடைய உளவு வானூர்தி பன்னாட்டு எல்லையில்தான் பறந்தது. அதை வேண்டுமேன்றே ஈரான் சுட்டு விழ்த்தியது எனக் குற்றம் சாட்டி யது.
இந்த நிலையில், ஈரான் மிகப்பெரிய தவறு செய்துவிட்டது என்று அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.
இந்தப் பதிவு அணு ஆயுதப் பலம்மிக்க அமெரிக்கா - ஈரான் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்காவின் ஆளில்லா வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் மீது இராணுவத் தாக்குதல் மேற்கொள்வதற்கு ட்ரம்ப் உத்தரவிட்டதாகவும், பின்பு அவசர அவசரமாகத் தனதுநிலைப்பாட்டைமாற்றிதாக்குதலுக்குத் தயாராகவிருந்த படை களைத் தடுத்து நிறுத்தியதாகவும் அமெ ரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டது. ஈரானின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே தாக்குவதற்கு திட்டமிடப்பட்டதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





**பின்னணி**
ட்ரம்ப் அதிபரானதில் இருந்து ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது அமெரிக்கா.
ஈரானுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கிறது.
ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம் என்றுகூறி வருகிறது ஈரான். இந்த நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா துறை முகத்தில் நங்கூரமிட்டிருந்த எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலுக்கு ஈரானே காரணம் என்கிறது அமெரிக்கா. வளைகுடாப் பகுதியில் படைகளைக் குவித்து வருகிறது அமெரிக்கா.

# நேரத்தை நிராகரிக்கிறது நோர்வேயின் தீவு ஒன்று

ஒஸ்லோ,ஜூன் 22
நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு என்று நோர்வேயைக் குறிப்பிடுவதுண்டு. வட துருவத்தில் இருக்கும் நோர்வேக்கும் சூரியனுக்கும் எட்டாப் பொருத்தமே.
அந்த வகையில் நோர்வேயின் சொம்மாரோயி என்கிற தீவில் தற்போது சூரியன் மறையாத காலம் நிலவுகிறது. இந்தக் காலம் தொடங்கி ஒருமாதமாகிவிட்டது.
கடந்த மே மாதம் 18ஆம் திகதியன்று தொடங்கியது. எதிர்வரும் வரும் ஜூலை மாதம் 26ஆம் திகதி வரை கிட்டத்தட்ட 69 நாள்களுக்கு அது நீளும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.




இதனால் அங்கு வசிக்கும்மக்களின் வாழ்க்கை சலனப் பட்டிருக்கிறது.
உலகின் நேரமற்ற பிரதேசமாகத் தமது பகுதியை அறிவிக்குமாறு கோரிக்கை வைத்திருக்கிறார்கள் அங்குள்ள மக்கள்.
இந்தத் தீவிலுள்ள மக்கள் தாம் இது வரை கடைப்பிடித்து வந்த நேரத்தில் இருந்து விடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேரம், காலம் பார்த்து வேலை செய்வது அவர்களால் முடியாமல் இருக்கிறது. தொடர்ந்தும் ஒரே பொழுதே நீடிப்பதால் நேர அட்டவணையில் வாழ்வது அவர்களால் முடியாமல் இருக்கிறது.
இதனாலேயே நேரமற்ற பிரதேசமாகத் தங்கள் பகுதியை அறிவிக்குமாறு அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் குறித்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# எகிப்திய முன்னாள் அதிபரின் சாவு குறித்த துருக்கி அதிபரின் கருத்துக்குக் கண்டனம்



கெய்ரோ,ஜூன் 22
எகிப்தின் முன்னாள் அதிபர் முகமது மோர்சியின் சாவு இயற்கையானது அல்ல என்று கூறிய துருக்கி அதிபர் எர்டோகனுக்கு எகிப்து தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தது. முகம்மது மோர்சியின் சாவு திட்டமிட்ட கொலை என்று எகிப்தின் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினர் குற்றம் சாட்டி வந்த நிலையில் அவரது சாவு தொடர்பாக வெளிப்படையான விசாரணை தேவை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.
அத்தோடு மோர்சியின் இறப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்ட அவரது நெருங்கிய நண்பரான துருக்கி அதிபர் எர்டோகன், 'இந்தச் சாவை இயற்கையானதாக நான் கருதவில்லை. அவர் நீதிமன்றத்தில் 20 நிமிடங்கள் உயிருக்குப் போராடி இருக்கிறார். அவருக்கு எகிப்திய அதிகாரிகள் உதவவில்லை" என்று குறிப்பிட்டிருந்தார்.
இதற்கு, எர்டோகனின் கருத்து பொறுப்பற்ற தன்மையையுடையது என்று எகிப்து கண்டனம் தெரிவித்தது.

**பின்னணி**
எகிப்தில் நீண்டகாலம் அதிபராக இருந்த சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக், ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2012ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று சகோதரத்துவ அமைப்பைச் சேர்ந்த முகம்மது மோர்சி அதிபரானார். அதிபர் பதவியில் ஓராண்டு மட்டுமே இருந்த முகமது மோர்சிக்கு எதிராகப் போராட்டம் வெடித்தது. அது உச்சமடைந்த நிலையில் எகிப்தின் அப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் தலைமையிலான இராணுவம், மோர்சியைப் பதவி நீக்கிக் கைது செய்து சிறையில் அடைத்தது. பின்னர் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டு, அந்த அமைப்பைச்சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டோரைக் கொல்வதற்கு உத்தரவிட்டதாக முகமது மோர்சி மீது வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன. வழக்கொன்றின் நிமித்தம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த மோர்சி நீதிமன்றத்திலே மயங்கி விழுந்து சாவடைந்தார்.





தெற்குஐரோப்பியநாடானபோஸ்னியாஹெர்சகோவினாவில்உள்ளபிஹாக்என்கிறமுகாமில்தஞ்சமடைந்த அகதிகள் உணவு, உடைகள், அத்தியவசியத் தேவைகளுக்காக காத்திருக்கிறார்கள்.

# 12அடி தூரம் உள்வாங்கியது கடல்

*கன்னியாகுமரியில் அச்சம்*


நாகர்கோவில்,ஜூன் 22
கன்னியாகுமரியில்நேற்றுமுன்தினம் கடல் சுமார் 12 அடி தூரம் வரை உள்வாங்கியது. தொடர்ந்துஇவ்வாறுகடல் உள்வாங்குவதுடன், அலைகளின் சீற்றமும் அதிகமாக இருந்ததால் சுற்றுலாப் பயணிகள், மீனவர்கள் அச்சமடைந்தனர். அத்தோடுவிவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலைக்குரிய படகுச் சேவைகள் 3 மணித்தியாலங்கள்வரை நிறுத்தப்பட்டன.

கடல் உள்வாங்கியதால் தண்ணீருக்குள் இருக்கும் பாறைகள், கடல் பாசியுடன் கூடிய திட்டுகள் வெளியே தெரிந்தன.

படகு இல்லத்தில் நிறுத்தப்பட்டி ருந்த சுற்றுலாப்படகுதரைதட்டியதால்விவேகானந்தர் பாறைக்குச் செல்வதற்காக அங்கு நின்ற சுற்றுலாப் பயணிகள் அதிர்ச்சியடைந்தனர். கடலில்மாற்றம் நிலவுவதால் கடலில் குளிக்க வேண்டாம் எனச் சுற்றுலாப் பயணிகளைப் பொலிஸார் எச்சரித்தனர்.

கன்னியாகுமரியில்கடந்தஒருவாரமாகக்கடல்கடும்சீற்றத்துடன்காணப்படுவதுடன் அவ்வப்போது உள்வாங்குகிறது. திடீரெனப் பெரும் அலைகள் எழுந்து கரைப்பகுதியில் வேகமாக மோதுகின்றன.

அலைகளின் சீற்றத்தால் இந்த மாதம் மட்டும் கடற்கரையில் நின்ற மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் என 7 பேர்கடலுக்குள்இழுத்துச்செல்லப்பட்டனர். இதில் 5 பேர் சாவடைந்தனர்.





# காவிரியை உடனடியாக திறந்துவிடுக

## வலியுறுத்தியது தமிழகம்

புதுடெல்லி,ஜூன் 22
காவிரி நீரை உடனடியாகத் திறந்தவிடுமாறுதமிழகஅதிகாரிகள்வலியுறுத்தினர். இந்தியாவின் டெல்லியில் உள்ள நீர்வளத்துறை அமைச்சகத்தில் காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் கூட்டம்அதன்தலைவர்நவீன்குமார் தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் கலந்து கொண்ட தமிழகஅதிகாரிகளேஇவ்வாறுவலியுறுத்தினர்.

காவிரி மேலாண்மை ஆணையகம் ஜூன் மாதத்தில் தமிழகத்துக்கு 9.19 டி.எம்.சி.காவிரிநீரைத்திறந்துவிடுமாறு கர்நாடகாவுக்கு உத்தரவிட்டது. ஆனால் 1.7 டி.எம்.சி. நீரை மட்டுமே திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனால் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய காவிரி நீரை உடனடியாகத் திறந்துவிடும்படி கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்றனர் தமிழக அதிகாரிகள். தென்மேற்குப் பருவ மழை தாமதமாகியுள்ளதால் நீர்வரத்து இல்லை. அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததால் தமிழகத்துக்குக் காவிரி நீரை திறப்பதில் சிக்கல்எழுந்துள்ளது'எனக்கர்நாடகா தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

நீடிக்கிறது தண்ணீர்த் தட்டுப்பாடு

# தண்ணீர் வழங்க முன்வந்த கேரளாவை தமிழகம் தடுத்ததாகத் தெரிவிப்பு

சென்னை,ஜூன் 22
நீண்ட நாள்களாக மழை இல்லாமல் வறண்டுகிடக்கும்இந்தியாவின்தமிழகத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவிவருகிறது. தமிழகத்தில் நீடித்து வருகின்ற வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு தமிழக மக்களின் தண்ணீர்த் தேவைக்கு 20 லட்சம் லீற்றர் தண்ணீர் வழங்க முன் வந்துள்ளது அயல் மாநிலமான கேரளா. தமிழகத்தின் வறண்ட பகுதிகளுக்கு இந்தக் குடிநீரை தொடருந்தில் அனுப்புவதற்குக்கேரளஅரசுமுன்வந்தது. ஆனால், 'எங்களுக்குத் தமிழக முதல்வர் அலுவலகம் அனுப்பிய பதிலில் இப்போதைக்குத் தண்ணீர் தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளது' என்று கேரள முதல்வர்அலுவலகம்வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்குப்பருவமழைகாலம் தாழ்த்திப்பெய்தாலும்கேரளாப்பகுதிகளில் போதிய நீர் உள்ளதாலேயே தமிழகத்துக்கு நீர் வழங்குவதற்குக் கேரளா முன்வந்தது. கேரளா தண்ணீர்வழங்கமுன்வந்தமைகுறித்துக் கேள்விப்பட்ட தி.மு.க. தலைவர் ஸ்ராலின், கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு நன்றி தெரிவித்தார்.



# இன்றைய நாள்

**மேடம்:** பேச்சு, செயல்களில் உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நிலுவைப்பணம் வசூலாகும். நண்பர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். புதிய வகையில் செலவு ஏற்படலாம். பெற்றோரின் தேவைய றிந்து வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** கடந்த கால சிரமம் குறித்து பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும்; வளர்ச்சி ஏற்படும். பிள்ளைகளால் கூடுதல் செலவு ஏற்படலாம்.

**கடகம்:** உதவி செய்யும் மனப்பான்மை மேலோங்கும். திட்டமிட்ட செயலில் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உபரி பணவரவு சேமிப்பாகும்.

**சிம்மம்:** மனதில் இருந்த குழப்பம் மறையும். உறவினர்களால் நிம்மதியும் பெருமிதமும் ஏற்படும். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்க கூடுதல் பணிபுரிவீர்கள்.

**கன்னி:** சங்கடமான சூழ்நிலையைஎதிர் கொள்ள நேரிடலாம். நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் வரும். குடும்ப செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**துலாம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். சொந்தப் பணியில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற தாமதமாகும்.

**விருச்சிகம்:** மனதில் அன்பும், கருணையும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு சீராக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**தனுசு:** சிலரது பேச்சு சங்கடம் தரலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில்வியாபாரவளர்ச்சிபெற நவீனமாற்றம்பின்பற்றுவீர்கள். பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். உபரி பணவரவு வந்து சேரும்.

**கும்பம்:** மாறுபட்ட நிகழ்வால் நெருக்கடி ஆளாகலாம். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்தி தேவைப்படும். பணவரவைவிட நிர்வாகச்செலவுஅதிகரிக்கும்.

**மீனம்:** முன்னர் தவறு நிகழ்ந்த பணியை சரி செய்வீர்கள். பலரும் உங்களிடம் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும்.

# பலாலி விண்மீன் வாகை

யாழ்ப்பாணம், ஜூன் 22
மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீர வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் பலாலிவிண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 4:2 என்ற கோல் கணக்கில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக விண்மீன் விளையாட்டுக்கழக அணி வீரர் யூட்கெனடி தெரிவு செய்யப்பட்டார். (23)



எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடர்;

# கிண்ணம் வென்றது சென்.யூட் வி.க.

யாழ்ப்பாணம், ஜூன் 22
முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் சென்.யூட் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை வென்றது. (23)

# பாடும்மீன் வாகை



யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# பொற்பதி வி.க. வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)



# சென்.அன்ரனிஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
மாமுனை கலைமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் மறைந்த வீர வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# ராதிகாவுக்கு கௌரவிப்பு

தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக இடம் பெற்ற பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் வடமாகாணம் சார்பாக பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த முள்ளியவளையைச் சேர்ந்த திரு



மதி ந.ராதிகா மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனால் கௌரவிக்கப்பட்டார். (222)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
ஞானம்ஸ் பெயின்ற், யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரின் 'பிளேஓவ்' ஆட்டங்கள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. இதில் காலை 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸிவிளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மதியம் 1.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,ஜூன் 22
கிளிநொச்சி கால்பந்தாட்டலீக்கில் பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலை மகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்.ஜூன்22
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எஹஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## இன்றைய போட்டி


ஆப்கானிஸ்தான்


மாலை 3 மணி


இந்தியா

## இன்றைய போட்டி



நியூசிலாந்து


மாலை 6 மணி


மே.இ.தீவுகள்




# சிங்கங்களின் கர்ச்சிப்பில் அடங்கியது இங்கிலாந்து

நீண்ட நாள்களின் பின்னர் இலங்கை அணியின் சிறப்பானதொரு போட்டியை நேற்யை தினம் காணக்கூடியதாக இருந் தது. மத்தியூசின் நிதான ஆட்டம், மலிங் கவின் அபார பந்து வீச்சு என இலங்கை அணியினர் கலக்கி சிறப்பானதொரு வெற் றியைப் பதிவு செய்தனர்.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் இலங்கை அணி 20 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கை அணி முதலில் துடுப்பெடுத்தா டத் தீர்மானித்தது. இலங்கை அணி 100 ஓட்டங்கள்ள எட்டுவதற்குள் 3 இலக் குகளை பறி கொடுத்தாலும் மத்திய தர வரிசை வீரர் மத்தியூஸ் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதி கரித்தார். இலங்கை அணியின் ஆரம்ப இலக்கை ஆர்ச்சர் கைப்பற்றினார். ஆனால் அவிஸ்க பெர்னாண்டோ அவரது பந்து வீச்சை துவம்சம் செய்தார். பதிலுக்கு மென்றிஸூம் அவருக்கு கைகொடுத்தார். மத்தியூஸ் இறுதி வரை ஆட்டமிழக்காமல் நின்று 86 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்க ளில் 9 இலக்குகளை இழந்து 232 ஓட்டங் களைப் பெற்றது.

பதிலுக்கு இலகு இலக்கு எனக் களமிறங் கிய இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தனர். இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள். அணி 1 ஓட்டத்தைப் பெற்ற போது பெயர்ஸ்ரோ ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். மலிங்க அபார மாக பந்து வீசி இங்கிலாந்து அணியின் முதல் 3 மூன்று இலக்குகளையும் சாய்த் தார். இலங்கை அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்கள் அடுத்த டுத்து வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினர். மறு முனையில் ஸ்ரோக்ஸ் தனியொருவராக போராட ஆரம்பித்தார். இலங்கை அணியின் களத்தடுப்பாளர்கள் சிறந்த முறையில் களத்தடுப்பை செய்தி ருந்தனர் என்று கூறலாம். கடந்த போட்டி களை விட களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்து வீச்சு என எல்லோரும் பெரும் பங்களிப்பு செய்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். இறுதி வரை போட்டி பரபரப் பாகக் காணப்பட்டது. இறுதியில் ஸ்ரோக்ஸ் எல்லைக் கோடுகளுக்கு அப்பால் பந்தை அனுப்பிக் கொண்டிருந்தார். இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களும் சளைக் காமல் வெற்றி முனைப்புடன் பந்து வீசி வெற்றியை எட்டிப் பிடித்தனர். இங்கி லாந்து அணி 47 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 20 ஓட் டங்களால் தனது சொந்த மைதானத்தில் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் மலிங்க 4 இலக்குகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினார். பதிலுக்கு டீ சில்வா 3 இலக்குகளையும், உதானே 2 இலக்கு களையும் கைப்பற்றி அணியின் வெற் றிக்கு பங்காற்றினர். ஆட்டநாயகனாக இலங்கை அணியின் வீரர் லசித் மலிங்க தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியுடன் இலங்கை அணி 6 புள்ளிகளுடன் முன்னேறியுள்ளது.





## ஆப்கானின் கோரிக்கையை நிராகரித்தது பி.சி.சி.ஐ.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இந் திய கிரிக்கெட் சபை அதிக அளவில் உதவி வருகிறது. ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் விளையாடுவதற்கு போதுமான வசதிகள் இல்லாததால், இந்தியாவில் உள்ள மைதா னங்களை சொந்த மைதானங்களாக கருது வதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அனுமதி அளித்துள்ளது.

இதனால் அயர்லாந்துக்கு எதிரான தொடரை ஆப்கானிஸ்தான் டேராடுனில் நடத்தியது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை ரி-20 கிரிக்கெட் லீக்கை நடத்தி வரு கிறது. இதையும் இந்தியாவில் உள்ள மைதா னங்களில் நடத்த அனுமதி தர வேண்டும் என இந்திய கிரிக்கெட் சபையிடம் ஆப்கானிஸ் தான் கேட்டிருந்தது.

இந்த நிலையில் நாங்கள் ஏற்கனவே ஐ.பி. எல். தொடரை நடத்தியதால், ஆலோசனை நடத்துவதற்கு உகந்தது அல்ல என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்தது.




## கில்கிறிஸ்ட்ருடன் இணைந்தார் டேவிட் வோர்னர்

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற போட்டியில் பங்களாதே ஷூக்கு எதிரான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வீரர் டேவிட் வோர்னர் சதம் கடந்து அசத்தியி ருந்தார். அவர் 166 ஓட்டங்களை அடித்து ஆட் டமிழந்தார். இந்தச் சதம் அவரது 16ஆவது சதமாகும். இதன் மூலம் அவர் ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஒருநாள் போட்டியில் அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் ஆடம் கில்கி றிஸ்ட் சாதனையை சமன் செய்தார்.

இருவரும் 3ஆவது இடத்தில் உள்ளனர். 29 சதங்களுடன் ரிக்கி பொண்டிங் முதலிடத்தி லும், 18 சதங்களுடன் மார்க் வாக் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

டேவிட் வோர்னர் 110ஆவது இன்னிங்சில் 16ஆவது சதத்தை தொட்டார். இந்திய அணித் தலைவர் விராட் கோக்லியும் தனது 16ஆவது சதத்தை 110ஆவது இன்னிங்சில்தான் அடித் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உருகுவே - ஜப்பான் ஆட்டம் சமநிலையில்



கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் உருகுவே - ஜப்பான் அணிகள் மோதின. இந்த ஆட்டம் 2:2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 25ஆவது நிமிடத்தில் ஜப்பான் அணி வீரர் மியோஷி கோல் ஒன்றைப் பதிவு செய்தார். பதிலுக்கு உருகுவே அணிக்கு ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த அணி வீரர் சுவாரஸ் கோல் ஒன்றைப் போட முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் 59ஆவது நிமிடத்தில் மீண்டும் ஜப்பான் அணி வீரர் மியோஷி கோல் ஒன்றைப் போட ஆட்டம் சூடு பிடித்தது. இதனால் உருகுவே வீரர்கள் கோல் அடிக்க முனைப்பு காட்டினர். ஆட்டத்தில் 66ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் ஜோஸ் ஜிமெனஸ் கோல் ஒன்றைப் போட்டார். இதனால் இரு அணிகளும் மீண்டும் 2:2 என சமநிலை பெற்றது. அதன்பின் இரு அணிகளும் ஆட்ட நேர முடியும் வரை எந்தவொரு கோல்களையும் அடிக்காததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. பந்தை அதிகமான கட்டுப்பாட்டில் உருகுவே அணி வீரர்களே வைத்திருந்தனர்.


பணிப்பெண் தேவை
ஓய்வுபெற்ற ஆசிரியைக்கு உதவியாகத் தேவை
இடம் :சாவகச்சேரி
தொடர்பு - 077 822 0115

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21.06.2019 | வெற்றி வாரம் 2544 | வர்ணம் நீலம்
கடகம்
வெற்றி இலக்கங்கள் 7 19 25 31
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,701,278 /=
23.06.2019ம் திகதி ஞாயிற்று கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 781 | சீட்டிழுப்பு திகதி 21.06.2019
வெற்றி இலக்கங்கள் 10 13 34 36 S
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 27, 617,104/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1579 | சீட்டிழுப்பு திகதி 20.05.2019
வெற்றி இலக்கங்கள் 12 18 39 65 N
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட் ரூ.32.823.480 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 991
சீட்டிழுப்பு திகதி 2019.06.20 வியாழக்கிழமை
B 15 31 61 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,413,212/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

உடனடி வேலைவாய்ப்பு

Presenter
Video Editor
Social Media Promoter
Translater
(English,Sinhala)
20க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
தொடர்புகள் - 0762455533
hr.samugam@gmail.com


## ரசிகர்கள் மோசமான நாட்களை அதிகம் மனதில் வைத்திருப்பார்கள்

### ரஷித் கான் ஆதங்கம்

நடப்பு உலகக் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான் அணி விளையாடி வருகின்றது. அந்த அணி நடைபெற்று முடிவடைந்த எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அணிக்குள் ஏராளமான குழப்பம் நீடிக்கிறது. இலக்குக் காப்பாளர் ஷேசாத் காயத்தால் நீக்கப்பட்டார் என்று அணி நிர்வாகம் தெரிவித்தது. ஆனால், அவரோ எனக்கு எந்தக் காயமும் இல்லை, என்னைக் கேட்காமல் தன்னிச்சையாக என்னை நீக்கினார்கள் என்று கூறியிருந்தார்.

உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பாக ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் ஆஸ்கர் அஸ்கரை நீக்கிவிட்டு, புதிதாக குல்பதின் நயிப்பை நியமித்தார்கள். இவர் நியமிக்கப்பட்டது அணியில் பல வீரர்களுக்கு பிடிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. அணிக்குள் ஒற்றுமை இல்லாத சூழல் நீடிக்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து அந்த அணி வீரர் ரஷித் கான் தெரிவிக்கையில்;

எனக்கும் அணித் தலைவர் குல்பதீன் நயிப்புக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. அணித் தலைவரை மாற்றினாலும் கவலையில்லை, மாற்றாவிட்டாலும் பரவாயில்லை. நான் குல்பதீனுக்காகவோ, கிரிக்கெட் சபைக்காகவோ விளையாடவில்லை. நான் எனது நாட்டுக்காக விளையாடுகிறேன். என்னுடைய பணி என்ன என்பது எனக்குத் தெரியும். நான் தொடர்ந்து விளையாடுவேன்.

அதேசமயம், இப்போது அணித் தலைவரை மாற்றுவதற்கு சரியான தருணம் அல்ல.. ஏனென்றால் உலகக் கிண்ணம் போன்ற பெரிய போட்டித் தொடரில் விளையாடுகிறோம். ஆசியக் கோப்பைப் போட்டியில் நாங்கள் இருந்த அணியைப் போல் இப்போது இல்லை என்பதை ஏற்கிறேன். இந்த சூழலில் திடீரென தலைமையை மாற்றும்போது அதுமேலும் குழப்பத்தையே ஏற்படுத்தும்.

என்னுடைய பந்துவீச்சு குறித்து விமர்சனங்கள் வருவதை பற்றி எனக்கு கவலையில்லை. மக்கள் 10 நல்லநாட்களை பற்றி பேசமாட்டார்கள், ஒரு மோசமான நாளைப் பற்றித்தான் மனதில் வைத்திருப்பார்கள். கடந்த 10 நாட்களாக ரஷித்கான் என்ன செய்தார், எப்படி பந்துவீசினார் என்பதை மறந்துவிட்டார்கள்.

என்னுடைய தவறுகள் என்ன என்பது எனக்கு தெரியும். அந்த தவறுகளை நான் அடையாளம் கண்டு சரிசெய்து வருகிறேன். என்னை விமர்சிப்பது குறித்து கவலையில்லை. அனைத்தையும் எளிதாகவே அணுகுவேன். பொதுவாக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் விளையாடும்போது அழுத்தம் அதிகரிக்கும். அதிலும் உலகக் கிண்ணப் போட்டியின்போது அழுத்தம் பன்மடங்கு உயரும், அது நிச்சயம் நமது திறமையில் பாதிப்பை ஏறப்படுத்தலாம்.



முதல் முறையாக தென்னாபிரிக்காவுடன் இப்போதுதான் விளையாடினோம். ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகளுடன் கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடி இருக்கிறோம். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு அணியுடன் மோதினால், பல பிரச்சினைகள் உருவாகும். அதை புரிந்து கொண்டு அதற்கு ஏற்றார் போல் செயற்பட வேண்டும் - என்றார்.



இன்றைய போட்டிக்காக இந்திய அணி வீரர் பாண்டியா பயிற்சியில் நேற்றைய தினம் ஈடுபட்டார். இதன்போது குழந்தைகளின் முகத்திலிருக்கும் மகிழ்ச்சியை ரசித்தேன் என்று பாண்டியா தனது ருவிற்றர் தளத்தில் தெரிவித்தார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.